அழகுத் தெய்வமான

மன்மதன் இளவேனில் ஒய்ந்ததும் பெண்மணிகள் கூந்தலைத் தன் இருப்பிடமாகக் கொண்டான் என்பர் மஹாகவி காளிதாஸர். எந்த அழகிய கூந்தல் தேவதைகள் கண்ணையும் கருத்தையும் பிணிக்குமோ, அக்கூந்தலை வருஷம் முழுவதும் எல்லாப் பருவங்களிலும் கேசவர்த்தினியின் உதவியால் பெறுங்கள். மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். கூந்தலைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

இளமையும், அழகும் கூந்தலுக்குத்தந்து கூந்தலை மனோஹரமாக்குவது கேசவர்த்தினி ஒன்றே.

முக அழகைக் கூந்தலினால் அழகு படுத்துங்கள். உங்கள் கூந்தலைக் கேசவர்த்தினிகொண்டு அழகு படுத்திக்கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப்பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது விலை அணா 12. மேற்செலவுவேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயனசாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

குறைந்த விலையில் கொசு வலைகள்

எமது வலைகள் அழுத்தமானவை. நான்கு முனைகள் நன்கு தைக்கப்பட்டவை. எல்லா வர்ணமும் கிடைக்கும்.

			சாதா	உயர்	சிறந்
நீளம்	அகலம்	உயரம்	ரூ.	ரூ.	ரூ.
6 அடி	3½ அடி	3½ அடி	2-0	2-4	3-10
6 ,,	4 ,,	4 ,,	2-4	2-8	4-2
6½ ,,	4½ ,,	4½ ,,	2-8	3-0	5-2
7 ,,	5 ,,	5 ,,	3-0	3-8	6-0
7½ ,,	6 ,,	6 ,,	3-8	4-0	7-2

மூன்று சேர்ந்தாற்போல் வாங்கினால் 6 அடி X 4 அடி X 4 அடி வலை ஒன்று இனாம். ஒவ்வொரு இனத்திற்கும் தபால் சார்ஜ் பிரத்யேகம். ஆங்கிலத்தில் எழுதவும்.

CALCUTTA CLOCK CO., (H 64)
15/1, Jay Mitter St.,
P. O. Hatkhola. Calcutta.

கால் புண்கள் மூலம் கெடுதி ஏற்படும்படி விடாதீர்கள்

ஜாம்-பெக் வலியைப் போக்கி, மாயமாய் குணப்படுத்தும்.

ஜாம்-பெக் வலியைச் சமனப்படுத்தி, சிரங்கு, ரணம், கால் புண்களிலிருந்து சீழ் வடிதலைக் கண்டு ஆச்சரியமடைவீர்கள். ஜாம்-பெக் மெழுகை தடவி கட்டிவிடுங்கள். ஜாம்-பெக்கிலுள்ள அற்புத மூலிகை ஆயில் சுலபமாக சருமத்திற்குள் செல்லுகின்றது. வீக்கம், வலி குறைந்துவிடுகின்றது. ஜாம்பெக் தழும்பின்றி குணப்படுத்தும். ஜாம்-பெக் மெழுகு ரூ. 1 அல்லது 2—4. ஸோப் ரூ. 1. பவுடர் ரூ. 1. ஏஜண்டுகள் :—மெஸர்ஸ் காதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ். எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்



கே.சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சிக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.



பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

ஜம்மியின் லிவர்க்யூர் மூலம் புனர்ஜன்மம்

ஜம்மியின்

லிவர் க்யூர்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி நோய்களை குணப்படுத்துவதில் தாமதமோ, அசட்டையோ செய்வது ஆபத்தாகும். நோய் கண்ட மாத்திரத்தில் 36 வருஷ காலமாக கீர்த்தி பெற்ற இச்சஞ்சீவியை உபயோகியுங்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்,
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்,
மற்றும்:-டம்பாம், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினாப்பள்ளி.

நெ. 48, பெரிய தெரு,
கும்பகோணம்.

இஸ்லாமிய நூல்கள்

மஹான் முகம்மது நபி	0	8	0
அபுபக்கர் ஸித்திக்	0	12	0
உமரே பாரூக்	1	0	0

முஸ்லீம் வாசகம் 1-5 வகுப்புவரை கிடைக்கும்.

ஷாஜஹான் புக் டெப்போ,
நாச்சியார் கோவில்.

வி.எச்.ஆர் பெருங்காயம்

Printed and Published by T.S. Visvanatha Iyer, B.A, at the Swadesamitran Power Press, Mount Road, Madras.- *Editor*, C.R. Srinivasan, B A

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No 21 21-6-42 Price 2 Anna

சென்றவார நிகழ்ச்சிகள்

வர்தா சம்பாஷணை

மகாத்மாஜியுடன் தாம் சம்பாஷித்து வந்ததைப் பற்றிப் பண்டித ஜவஹர்லால் நேரு வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்குப் பிரத்யேகமாக ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

"காந்திஜியை நான் பூரணமாக ஆதரிக்கிறேன், இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் சர்க்கார் உடனே ஒழுங்கான முறையில் வெளியேறிவிட வேண்டுமென்ற கோரிக்கையை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். பிரிட்டிஷ் பார்லிமெண்டு நடந்து வரும் தோரணை கண்டும், என்னுடைய மாகாணத்தில் சர்க்கார் ஆரம்பித்திருக்கும் அடக்கு முறை கண்டும் நான் பெரிதும் ஏமாற்றமடைந்திருக்கிறேன்," என்று அவர் கூறிவிட்டு, 'பாஸிஸ்ட், அச்சு நாட்டுப் பங்காளிகள் எங்களுடைய விரோதிகள். ஆனால், இந்தியா விடுவிக்கப்படும் வரையில் பிரிட்டிஷ் சர்க்காருடன் நாம் நடத்திவரும் போராட்டம் நிற்காது. அதற்கிடையே ஜப்பானியர் இந்தியா மீது படையெடுத்தால் அதை நாம் கண்டிப்பாக எதிர்ப்போம். ஆனால் இந்தியாவுக்குச் சுதந்திரமளிக்க மறுத்து வந்துள்ள பிரிட்டிஷ் சர்க்காருடன் எந்தக் காரணத்தைக் கொண்டும் நாம் சமரஸமாகப் போகமுடியாது" என்று உரைத்தார்.

அமெரிக்கரைப்பற்றி அபிப்பிராயம் கூறுகையில் பண்டிதர், "அமெரிக்கர் நமது நண்பர்கள்தான் ஆனால் அமெரிக்க ராணுவம் இந்தியாவில் வந்திறங்கி, இந்நாடு பூராவும் ஆக்கிரமிப்பதை நாங்கள் விரும்ப மாட்டோம்" என்றார்.

காந்திஜி ஆரம்பிக்க உத்தேசித்திருக்கும் பொதுஜன இயக்கம் எவ்வாறு நடக்குமென்பதைப்பற்றி விவாதிக்கையில் ஜவஹர். "அதன் பலனை இன்னும் இரண்டு மாதங்களில் நீங்கள் காண்பீர்கள்" என்று மிகுந்த நம்பிக்கையுடன் கூறினார்.

* * * *

காங்கிரஸ் காரியக் கமிட்டி

காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் வார்தாவில் ஜூலை மாதம் முதல் வாரத்தில் நடக்குமெனத் தெரிகிறது.

* * * *

இந்தியருக்கு மன்னர்பிரான் செய்தி

அரசர் பெருமானின் தம்பியாகிய கிளஸ்டர் கோமகன் இந்திய பிரிட்டிஷ் துருப்புகளையும் கடற்கரையினரையும் விமானப் படையினரையும் நேரில் கண்டு அரசர் பெருமானின் சார்பாக பேச எகிப்து மேற்குப் பாலைவனம் இரான் முதலிய விடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு சென்ற 12-ந் தேதி பகல் புதிய டில்லி விமான கூட்டத்தில் வந்திறங்கினர். ராஜப் பிரதிநிதி அவரை வரவேற்றார்; வழியில் காற்று அதிகமாகவிருந்ததால் விமானம் மூன்று மணிநேரம் தாமதித்து வந்தது. ராஜப் பிரதிநிதி தமது மாளிகைக்குக் கோமகனை அழைத்துச் சென்று அங்கிருந்த நிர்வாக சபை அங்கத்தினர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

மன்னர்பிரான் அனுப்பியுள்ள செய்தியை கிளஸ்டர் கோமகன் ரேடியோ மூலம் வெளியிட்டார். அதன் சாரமாவது:—"என் தம்பி இந்தியாவுக்கு வந்திருப்பது எனக்குச் சந்தோஷத்தைத் தருகிறது. இந்திய நாட்டுக்கு நான் இதுவரை வராதது எனது துரதிர்ஷ்டம் தான். மீண்டும் சமாதானம் நிலைக்குமானால் நான் இந்தியாவுக்கு விஜயம் செய்ய விரும்புகிறேன். இந்தியாவில் சுதந்தரத்துக்கும் சமாதானத்துக்கும் வழி தேட நான் செய்யவிருந்த வேலைகளை இந்த யுத்தம் தடுத்து விட்டது நாமாக இந்த யுத்தத்தை தொடுக்கவில்லை. நாம ஒரு தர்மத்துக்காகவே இப்போது போராடுகிறோம். இந்தியாவிலுள்ள சமஸ்தானாதிபதிகளும் பிறரும் செய்து வரும் உதவியை நான் பாராட்டுகிறேன். ஆனால் இன்னும் எவ்வளவோ அதிகம் செய்ய வேண்டியிருக்கிறது. இனி தாமதிக்கக் கூடாது. விரோதி நமது வாயிலுக்கு வந்து விட்டான். ஆனால் நல்லெண்ணமும் ஒத்துழைப்புமிருந்தால் எல்லாவற்றையும் சமாளித்துவிடலாம் இந்திய ராணுவம ராஜவிஸ்வாசத்துடன் திறமையாகப் போராடி வருகிறது. இந்தியக் கடற்படையும் விமானப் படையும் பாராட்டக் கூடிய வண்ணம் நடந்து வருகின்றன. தேசபாதுகாப்புப் படையினரும் தக்கவாறு நடப்பார்கள் என நம்பியிருக்கிறேன். சக்ரவர்த்தி என்ற முறையில் நான் இந்திய மக்களுடன் சேர்ந்து சேவை செய்வதை ஒரு பெருமையாகவே கொள்ளுகிறேன். இந்தியாவுக்கு ஏற்படக் கூடிய ஆபத்துகளை நீங்கள் மிக்க தைரியத்துடனும் உறுதியுடனும் சமாளிப்பீர்கள் என நம்பியிருக்கிறேன் பொதுவாக ஏற்பட்டுள்ள இத்தக் கஷ்டத்தால் அவநம்பிக்கைகள் போய் நிரந்தரமான நல்லெண்ணம் நிலைத்து, இந்தியாவுக்குக் கதிமோக்ஷம் ஏற்பட வேண்டும். யுத்தம் முடிந்தபின் ஆண்டவன் அருளால் இப்போதுள்ள கஷ்டங்கள் மறைந்து நல்ல பலன் கிடைக்கும்"

* * * *

ஐரோப்பியச் செய்திகள்

ருஷ்ய-பிரிட்டன் ஒப்பந்தம்

யுத்த காலத்திலும் யுத்தத்திற்குப் பிறகு 20 வருஷ காலத்திற்குள் அச்சு நாடுகள் தாக்கினால் அப்போதும் பரஸ்பர உதவி செய்து கொள்ளுவதற்கான ஒப்பந்தம் லண்டனில் மே 26-ஆம் தேதி கையொப்பமான தாகவும், அதில் பிரிட்டன் சார்பாகத் தாமும் சோவியத் ரஷ்யாவின் சார்பாக மொலடாவும் கையொப்பமிட்டிருப்பதாகவும், காமன்ஸ் சபையில் மிஸ்டர் ஈடன் தெரிவித்தார்.

* * * *

துருக்கியில் சிறைப்பட்ட விமானங்கள்

கருங்கடல் கரையிலுள்ள அச்சுத்தளங்கள் மீது குண்டுப் பிரயோகம் செய்த பிறகு 3-பெரிய அமெரிக்க வெடிகுண்டெறியும் விமானங்கள் சென்ற 14-ந் தேதி அங்கரா விமான நிலையத்தில் வந்திறங்கின அவற்றைப் பார்த்ததிலிருந்து அவை சேதமடைந்ததாகத் தெரியவில்லை யென்று நமது நிருபர் கூறுகிறார். ஓடிசா, நிகோபாவ் துறைமுகங்களையும் ருமேனியாவிலுள்ள குறிப்பிடங்களையும் அவை தாக்கியதாகத் தெரிகிறது. அமெரிக்க விமானங்களை ஜெர்மன் போர் விமானங்கள் துரத்திச் சென்றதாயும் அவை (அமெரிக்க விமானங்கள்) துருக்கிக் கடலை அடைந்தன வென்றும் அங்கு ஒரு துருக்கி ரோந்துக்கப்பல ஜெர்மன் விமானங்கள் மீது பீரங்கிப் பிரயோகம செய்ததென்றும் தெரிய வருகிறது. போர் விமானங்கள் பிறகு திரும்பிச் சென்றுவிட்டன. விமானங்கள் எகிப்திலிருந்து வந்தன என்பதால் மிகுந்த சிரத்தை ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் சமீபக் கிழக்குப் பிரதேசத்தில இப்பொழுது தான யுனைடெட் ஸ்டேட்ஸ் விமானப் படைகள் முதன முதலாக வேலை செய்ய ஆரம்பித்திருக்கின்றன.

மிஸ்டர் சர்ச்சில்

மேஜர் ஜா... சர்ச்சில். இவர் பிரதம மந்திரி மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சிலின் சகோதரர். அவரை விட ஆறு வயது இளையவர். இப் படம் இவர் சமீபத்தில் லண்டன் வந்தபோது எடுத்தது தென்னாப்பிரிகா யுத்தத்திலும் உலக மஹா யுத்தத்திலும இவர் தேசத்திற்கு சேவை செய்தார், இப்போது தமது பெரிய சகோதரருக்கு உதவி புரிந்து வருகிறார்.

4-வது வெடி குண்டெறியும் விமானம் அரிவையில் வந்திறங்கியது. எல்லா வெடி குண்டெறியும் விமானங்களிலும அமெரிக்க அடையாளங்களிருந்தன. அவை அமெரிக்க விமானிகளால் ஓட்டப்பட்டன. இவ் விமானிகள் தற்போது காவலில் வைக்கப்படுவார்கள். எண்ணெயில்லாததால அவை இங்கு வந்திறங்கியதாக உறுதியாக நம்பப்படுகிறது.

* * * *

டர்பனில் விளக்கணைப்பு

தென்னாப்பிரிக்காவிலுள்ள டர்பனில் இம்மாதம் 9ந் தேதி இரவு திடீரென விளக்கணைப்பு எதிர்பாராதபடி அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. மார்டஸ் பார்க் என்ற இடத்தில் அபாய அறிவிப்புச் சங்குகள் ஊதப்பட்டன. விளக்கணைப்புக்கான காரணமெதுவும் கூறப்படவில்லை.

* * * *

ஐக்கிய நாடுகளின் லட்சியம்

ஐக்கிய நாடுகள் தினவிழா கொண்டாடப்பட்ட சமயம் ஜனாதிபதி மிஸ்டர் ரூஸ்வெல்ட் பேசியதன் சாரம் பின்வருமாறு:—

எதிரிகளை முறியடித்து, மனித சமூகத்தின சுதந்திரத்தை ஆதாரமாகக் கொண்ட ஒரு உண்மையான சமாதானத்தை ஏற்படுத்தவே இந்த ஐக்கியம் ஏற்பட்டிருக்கிறது.

பொதுவாக மனித வர்க்கத்திற்குரிய நான்கு சுதந்திரங்களும மனிதனுக்கு காற்றையும் சூரிய வெளிச்சத்தையும் உணவையும் உப்பையும போல அவ்வளவு அத்யாவசியமானவை. இந்த சுதந்திரங்கள் அனைத்தையும் பறித்து விட்டால் மனிதன் இறக்க வேண்டியது தான். அவற்றில் ஒரு பாகத்தைப் பறித்தால் அந்த அளவுக்கு மனிதன் வதங்க நேரும். அச் சுதந்திரங்களை மனிதர் முழு அளவு அடைவராயின் அவர்கள் வாழ்வில் ஒரு புது சகாப்

(அடுத்த பக்கம் பார்க்க)

"ஹரிஜன்" கட்டுரைகள்

தடை எது?

"ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை இல்லையேல் சுயராஜ்யமில்லையென இத்தனை நாளாகச் சொல்லி வந்தீர்களே, இப்போது மட்டும் அதை மாற்றி, சுதந்திரம் கிட்டி விட்டால் வகுப்பு ஒற்றுமை ஏற்பட்டு விடுமெனச் சொல்ல ஆரம்பித்திருப்பதன் காரணமென்ன" என நிருபர் ஒருவர் மகாத்மாவைக் கேட்டதற்கு, மகாத்மா கூறியதாவது:—

சுயேச்சையடைவதே காங்கிரஸ்-லீக் ஆகியவற்றின் கொள்கையாகவிருந்தால் எவ்வித ஒப்பந்தமுமின்றி அவை அடிமைத் தளையை அறுக்க ஒன்றுபட்டுப் போராடுவதில் என்ன தடையிருக்கிறது?

காலசக்கரம் சற்றும் இரக்கமின்றிக் கனவேகமாகச் சுழன்று கொண்டிருக்கிறது. காலக்கிரமத்தில் எத்தகைய புண்ணும ஆறி விடுவதும் உண்டு. அந்த இனத்தில் அது கருணை மிகுந்த நண்பனாகவே இருக்கிறது. முதலில் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை வேண்டுமென பலநாளாகப் போராடி வந்தவர்களில் நானும் ஒருவன்தான். இப்போதும அவ்வித அபிப்பிராயத்துடன்தான் இருக்கிறேன். நானும் மற்றவர்களும் சேர்ந்து வகுப்பு ஒற்றுமைக்காக மனப்பூர்வமாகச் செய்த முயற்சிகளெல்லாம் பலிக்காது போனதற்குக் காரணம் என்னவென்று இப்போதும் நான் என் மனத்தே அடிக்கடி சிந்தித்துப் பார்க்கிறேன். அதோடு எனது முயற்சி பலிக்காது போனதோடு முஸ்லிம் பத்திரிகைகள் சில நான் இஸ்லாத்துக்குப் பெரிய விரோதி என்றும் எழுதுகின்றன இடையில் ஒரு மூன்றாவது மனிதர் இருந்துகொண்டு வகுப்பு ஒற்றுமைக்கு வழி ஏற்படாத மார்க்கத்தைத் தேடி வருவதாகவே நான் கருதுகிறேன். அவர்கள் அவ்விதம் நடக்கவேண்டுமென் விரும்புகிறார்களோ இல்லையோ அது தெரியாது. எப்படியோ வகுப்பு ஒற்றுமை சித்திக்காமலேயிருக்கிறது.

ஆகையால் நான், இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆதிக்கம் மறைந்தால் இருதரப்பாரும் ஒன்றுபட்டு விடுவார்கள் என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். உடனே சுயேச்சையடைவது தான் காங்கிரஸுக்கும் முஸ்லிம் லீகுக்கும் முக்கிய நோக்கமானால் அவை இரண்டும் ஏன் இப்போதே எவ்வித ஒப்பந்தமுமின்றி ஒன்றுபட்டு உழைத்து நாட்டை விடுதலை செய்யக் கூடாது?

அடிமைத்தனம் அகன்றால் அந்த இரண்டு ஸ்தாபனங்கள் மட்டுமின்றி எல்லாக் கட்சியினருமே தங்கள் நன்மையைக் கருதியாவது அந்த சுதந்தரத்தைத் துணைகொண்டு இந்தியாவுக்கேற்ற ஒரு தேசிய சர்க்காரை அமைக்க முற்படுவார்கள். அதற்கு எந்தப் பேர் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. அந்த சர்க்கார் நிலைக்க வேண்டுமானால் அது பாமர ஜனங்களின் பிரதிநிதித்துவம் பெற்றதாக இருக்கவேண்டும். பொதுஜன விருப்பப்படி அதன் காரியங்கள் எந்த நோக்கத்துடன் நடக்க வேண்டுமானால், அது அஹிம்ஸா வழியைத்தான் பின்பற்ற வேண்டும். எப்படியிருந்தாலும் என் ஜீவன் உள்ளவரையில் நான் அவ்வழியில்தான முயற்சி செய்வேன். அஹிம்ஸா வழியை அநுஷ்டிக்காவிட்டால் மனித கோடிகளுக்கு உய்வில்லையென்பதே எனது துணிபு. பலாத்காரத்தின் அலங்கோலம் இன்னதென்பதை நாம் நாளுக்கு நாள் நன்கறிந்து வருகிறோம். அறிவற்ற இந்தக் கொலைகள் நீடிக்குமானால் மனித வர்க்கம் எவ்விதம் கடைத்தேற முடியும்?

மகாத்மாவின் முடிவு

"ராஜாஜிக்கும் எனக்குமுள்ள கருத்து வேறுபாட்டை முன்னமே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்த அபிப்பிராயத்தை நான் ஒரு சிறிதும் மாற்றிக் கொள்ளவில்லை; நான் சொன்னதாக அவர் எடுத்துக் காட்டும் வார்த்தைகளுக்கு அவர் கூறும் வியாக்யானம் சரியல்லவென்பதை நான் மீண்டும் வற்புறுத்துகிறேன். ஆனாலும் நான இனி அது விஷயமாக பஹிரங்கச் சர்ச்சையில் இறங்கப் போவதில்லை.

என் கருத்து தவறானதென்பதில் சந்தேகமில்லை என ராஜாஜி கூறுகிறார். அந்தத்தவறை நான் காலக்கிரமத்தில் உணருவேன் என்றும் அவர் நம்புகிறார். அவ்விதமே ஒரு நாள் ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்று நானும் நம்புகிறேன். ஆனால் ராஜாஜியைப் போன்ற நெருங்கிய தோழர் ஒருவருடன் இவ்விதம் பகிரங்கமாக சர்ச்சை செய்வது எனக்கு வருத்தத்தைத் தருகிறது. அவர் புதியதொரு லக்ஷியத்தை வற்புறுத்துவதால் அவர் பேசவேண்டியது அவசியம்தான்" என்று "ஹரிஜன்" பத்திரிகையில் மகாத்மா எழுதுகிறார்.



அமெரிக்காவில இந்திய ஏஜண்ட்-ஜனரலாக இருக்கும் ஸர் கிரிஜா சங்கர் பாஜ்பை நியூயார்க்கில் ஏப்ரல் மாதம் "இந்தியாவின் யுதத முயற்சி" பற்றி பிரசங்கம் புரிந்தார். மிஸ்டர் வெண்டல் வில்கி அச்சமயம் தலைமை வகித்தார்.

உணவுப்பொருள்கள்

வீணாக்கப்படும் உணவைப் பற்றி மகாத்மா காந்தி "ஹரிஜன்" பத்திரிகையில் தமது அபிப்பிராயத்தை தெரிவித்திருக்கிறார்:—'உணவுப்பொருள்கள் பாழாக்கப்படுவது வாஸ்தவமே: ஆனால் இது நகரங்களில்தான் அதிகமாக இருக்கிறது. இந்நாட்டில் லக்ஷக்கணக்கானவர்கள் பட்டினியால் வாடுகிறார்கள். உணவுப் பொருள்களை வீணாக்கக் கூடாதென்று நகரங்களில் சுலபமாகப் பிரசாரத்தை ஆரம்பிக்கலாம். சாப்பாட்டை எறியக்கூடாதென்பதை ஒவ்வொருவரும் அறிய வேண்டும். ஏழைகள் பேரில் நாம் இரக்கம் காட்டவேண்டும். இப்பிரசாரம் மூலம மிச்சப்படும் அத்தனை உணவும் புதிதாக உற்பத்தி செய்ததற்குச் சமமே. இப்பிரசாரம் சம்பந்தமாக துண்டுப் பிரசுரங்கள் தயாரிக்கப்படவேண்டும். புள்ளி விவரங்கள் மூலம் விஷயத்தை விளக்கவேண்டும். பணக்காரர்கள் எறிந்து விடுவதற்காக இலை நிறையப் போட்டுக்கொள்ள வேண்டுமென்ற மூடநம்பிக்கைக்கு இடம் கொடுக்கலாகாது. வீட்டிலும் சரி; ஹோட்டலிலும் சரி உணவுப் பொருள்களை வீணாக்குவது கெடுதல் என்று அனைவரும் எண்ண வேண்டும. சமூக ஸேவையில்தேர்ந்த அனுபவமுடைய மார்வாடி சங்கம் தான் மேற்படி பிரசாரத்தில் இறங்க வேண்டும். பிரச்னையில் நகருக்கு நகர் ஜனங்களின் பழக்க வழக்கங்களையொட்டி சிற்சில மாறுபாடுகளிருக்கலாம. ஆகவே முதலில் கல்கத்தாவில் வேலையை ஆரம்பித்துப் பரீக்ஷார்த்தமாகப் பார்க்கலாமென்று நான் யோசனை கூறுகிறேன். இதற்கு ஏராளமான ஊழியர்கள் தேவை."

(முன் பக்கத் தொடர்ச்சி)

கம் ஆரம்பமாகும். மனித சமூகம் கண்ட சகாப்தங்கள் அனைத்திலும் அதுவே மகத்தானது. இந்த சுதந்திரங்கள் எந்த இடத்திலும், எந்த ஜாதியையும் எந்தப் பிரிவையும் சேர்ந்த எல்லா மக்களுக்கும் உரியவையாகும். இவற்றை நெடுநாளுக்கு முன்பே அவர்கள் அடைந்திருக்கவேண்டும். இப்போது மனிதருக்கு இச் சுதந்திரங்கள் கிடைக்குமாறு செய்வதற்குப் போதிய சக்தியும் ஆள் பலமும் மன உறுதியும் ஐக்கிய நாடுகளுக்கு இருக்கின்றன.

* * * *

அட்டுத் தீவில் எதிரிப் படை

அலூஷியன் தீவுகளின் ஒரு கோடியிலுள்ள அட்டுத் தீவில் சிறியதொரு ஜப்பானியப் படை இறங்கியிருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது. ராட் தீவுகளது கூட்டத்திலுள்ள கிஸ்கா என்ற துறைமுகத்தில் ஜப்பானியக் கப்பல்களிருக்கின்றன என்று கூறப்படுகிறது.

நான்சங்கில் ஜப்பானியப் படை

பீரங்கிகளையும் விமானங்களையும் கொண்டு ஜப்பானியர் குண்டுகளைப் பொழிந்துவிட்டு வெள்ளிக்கிழமை கியாங்ஸி போர் முனையிலுள்ள நான்செங் என்ற நகருக்குள் பிரவேசித்தனர். உக்ரமான தெருச் சண்டையில் 600 ஜப்பானியர் இறந்தனர்; சீனர்களை விட ஜப்பானியரது படை பலம் மிக்க அதிகமாக இருந்ததனால் சீனர்கள் நகரைக் காலி செய்து விட்டனர்.

அட்டைப் படம்

ஜின் டார்னி என்ற பிரபல நடிகை.

வீணையின் நாதம்

★

தி. நா. சுப்பிரமணியம்

வீணையின் அமைப்பு இப்போதுள்ளதைப்போலவே எந்தக்காலத்திலும் இருந்திருக்கவில்லை. இப்போது வீணையிலே ஒரு ராகத்தை வாசித்துக் கொண்டிருப்பவர்கள் அதை நிறுத்திவிட்டு உடனே வேறு ராகத்தை ஆரம்பித்து வாசிக்கலாம். ஆனால், முற்காலத்தில் ஒவ்வொரு ராகத்தையும் ஆரம்பிக்குமுன் வீணையைச் சுருதி சேர்த்து அந்த ராகத்திற்கெனத் தனியாக அமைத்துக்கொள்ள வேண்டும். பழையமுறையை மாற்றி மாறுதலைச் செய்த பெருமை கி. பி. பதினேழாம் நூற்றண்டின் முற்பகுதியில் தஞ்சாவூரினின்றும் ஆண்டுவந்த நாயக்க மன்னரான ரகுநாத நாயக்கருக்கும் அவருடைய மந்திரியான வேங்கடமகி என்பவருக்கும் உரியது. மன்னர் மாறுதலைச் செய்ய நேர்ந்த அவசியத்தைக் கூறும் இக்கதை.

அவன் பஞ்சணையின் மீது புரண்டு படுத்தான். நல்ல தூக்கமும் இல்லை; நன்றாக விழித்துக்கொள்ளவும் இல்லை. அரைத் தூக்கத்தில் கண் மயங்கியபடியே எழுந்திருக்க மனம் இல்லாமல் அவன் படுத்திருந்தான்.

விடியற்காலம் ஆகிவிட்டது. குளிர்ந்த காலைக் காற்று அந்த அறையின் விசாலமான சாளரங்கள் வழியாகப் புகுந்து உள்ளே வீசியது; தோட்டத்தில் மலர்ந்திருந்த மல்லிகை முதலிய பூக்களின் நறுமணமும் கலந்திருந்த அந்தக் காற்று அவன் மீது பட்டவுடன் அவன் உடலில் ஓர் இன்பம் உண்டாயிற்று.

அன்றைத் தினம் வைகாசி மாதப் பௌர்ணமி. வானம் களங்கமில்லாமல் இருந்தது. மேல்புறமாக அடி வானத்தில் சந்திரன் தன் வட்ட வடிவத்தைக்கொண்டு பால்போன்ற நிலவை எங்கும் பரப்பிவந்தான்.

ரமணியமான அந்த விடியற்காலையில் யாருடைய மனத்திலும் எந்த விதமான கவலையும் களைப்பும் தோன்றாது. எல்லோரையும் சந்தோஷிக்கச் செய்து உற்சாகமூட்டும் இயற்கைச் சக்தி வாய்ந்த நேரம் அது. அரண்மனை உப்பரிகையில் பஞ்சணை மீது படுத்திருந்த ரகுநாதன் மனத்திலே ஸ்வர்க்க போகத்தை அனுபவிப்பதே போன்ற ஓர் இன்ப உணர்ச்சி தோன்றியதில் ஆச்சரியம் இல்லை.

'விடியற்காலைத் தூக்கத்தின் சுகத்துக்கு ஈடாக எதையும் கூற முடியாது' என்று சொல்வார்: ரகுநாதனுக்கு அந்தச்சமயம் அதே அனுபவம் ஏற்பட்டது போலும்.

அருணோதயம் ஆகிவிட்டதை அவன் அறியான். தூக்கம் கண்ணை மயக்கியதால் புரண்டு படுத்தான்.

அப்பொழுது அவனை தாலாட்டுவது போல மெல்லிய நாதம் ஒன்று எழுந்தது. அதன் இனிமை அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அது வீணையின்றும் எழுந்த ஒலியே. அதனைத் தன் இரு செவிகளாலும் பருகி அனுபவித்து வந்த அவன் மனசு அதிலேயே லயித்து விட்டது. நாட்டை ராகத்தின் நாதம் எங்கும பரவி இருந்தது.

ராகங்கள் தெய்வ ஸான்னித்யம் பெற்றவை; ஜீவன் உள்ளவை. எந்தெந்த ராகங்களை எந்தெந்த காலங்களில் அப்யஸிக்க வேண்டும் என்பதற்கு விதிகள் உண்டு, அந்தக் காலங்களிலே தான் அவை தம் பூர்ண சக்தியுடன் வெளிப்பட்டு அவற்றின குண விசேஷப்படிக் கேட்பவர் மனதை உருவாக்கும்.

ரகுநாதன் சங்கீதத்தின் கரையைக் கண்டவன், ராகங்களின் உரிய நேரங்களை அவன் நன்கு அறிவான். நாட்டை ராகத்தின் தொனியைக் கேட்ட அவன், நடுநிசியே ஆகவில்லையே என்று எண்ணித் தூங்குவதற்காகக் கண்ணை மூடினான்.

ஆனால், தூக்கம் வரவில்லை. இடைவிடாமல் ஒலித்துக் கொண்டிருந்த அந்த நாதம் அதைக் கெடுத்து விட்டது போலும்! அவனுடைய தூக்க மயக்கம் கொஞ்ச கொஞ்சமாகக் கலைந்தது. பொழுது புலரும் தருணம் வந்து விட்டது என்பதை அறிந்தவுடன் அவன் திகைத்துவிட்டான். விடிய ஒரு ஜாமப்பொழுது இருக்கையிலேயே எழுந்துவிடும் தான வழக்கத்துக்கு மாறாக அது வரையில் தூங்கியதற்காக அன்று விடியற்காலத்தில் வீணையில் நாட்டை யாரோ வாசிக்கிறாரே என்பதை அறிந்தே அவன் திடுக்கிட்டான்.

அது அவனுக்கு ஆச்சரியத்தோடு மிகுந்த கோபத்தையும் உண்டாக்கியது. உரிய காலம் கடந்த பிறகு ராகங்களை அப்யசிப்பது சாஸ்திர விரோதம்: அதனால் விபரீதமான விளைவுகள் நேரிடவும் கூடும்.

நாதம் சமீபத்திலிருந்து தான வந்துகொண்டிருந்தது. அறையின் வெளிப்புறத்தே அமைந்திருந்த நிலாமுற்றத்திலிருந்து தான் அது கிளம்பி வந்தது என்பதை அவன் எளிதில் உணர்ந்து விட்டான். அங்கே தான் அவனுடைய ஆஸ்தான வித்வான்களும் பலரும் கூடிப் பாடுவது வழக்கம். காலாதீதமான ராகத்தைத் தன்னெதிரிலேயே பாடத் துணிந்த அந்த வித்வானைப் பிடித்து உடனே தண்டித்து விடவேண்டும் என்று எண்ணிய அவன் படுக்கையினின்றும் குதித்து அறைக்கு வெளியே வந்தான்.

அங்கே கண்ட காட்சி அவன் ஆச்சரியத்தை அதிகப்படுத்தியது. நிலா முற்றத்தில் ஒருவரும் இல்லை. திறந்த வெளியில் ஒரு வீணை வைக்கப்பட்டிருந்தது. அந்த வீணையினின்றுமே நாட்டை ராகம் ஒலித்துக் கொண்டிருந்தது. மனிதன் மீட்டாமல் தானாக ஒலிக்கும் சக்தி வீணைக்கு உண்டோ?

ஸ்தம்பம் போல் திகைத்து நின்ற அவனுக்கு முதல் நாள் இரவு சம்பவங்கள் ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தன.

ஆம். முதல் நாள் இரவு முற்பகுதியை அவன் தன் அன்பிற்குகந்த மாதர்கள் சிலருடன் அந்த முற்றத்தில் பாடிக் களித்துப் பொழுது போக்கினான். ஒருத்தி வீணையை மீட்டி நாட்டை ராகத்தைப் பாடி கொண்டிருந்தாள். அதிலேயே லயித்திருந்த மன்னன் அப்படியே தூங்கிவிட்டான்.

அரசன் தூங்கிவிட்டான் என்பதை உணர்ந்த அம்மகளிர் தங்கள் கேளிக்கைகளை நிறுத்திவிட்டார்கள். அரசனை எழுப்பி உள்ளே அழைத்துச்சென்று மஞ்சத்தில் படுக்க வைத்தார்கள். அது அவனுக்குக் கனவு போல மெள்ள நினைவுக்கு வந்தது.

வீணை வாசித்து வந்தவளுக்கும் அரசனைப்போலவே தூக்கம் வந்துவிட்டது. அவள் திரும்பிவந்து வீணையை எடுத்து வைக்கவில்லை. அவள் அப்படியே தூங்கப்போய்விட்டாள்.

அந்தக்காலத்தே வீணையின் அமைப்பு இப்போது உள்ளதைப்போல இருந்திருக்கவில்லை. இப்போது உள்ளதைப் போல எல்லா ராகங்களுக்கும் பொதுவான நாதத்தைக்கொடுக்கக் கூடிய அமைப்பு இல்லை. ஒவ்வொரு ராகத்தையும் வாசிக்க ஆரம்பிக்குமுன் பிருடைக்கட்டைகளை மாற்றி அமைத்துச் சுருதி சேர்த்து அந்த அந்த ராகத்தின் நாதத்தைக்காட்ட வேண்டும்.

காலையில் வீச ஆரம்பித்த காற்று தந்திக்கம்பிகளின் மீது பட்டவுடன் நாதம் தானாகக் கிளம்பிவிட்டது.

நன்றாக ஆராய்ந்த மன்னன் ரகுநாத நாயக்கருக்கு உண்மை விளங்கிவிட்டது.

அவனுக்கு மேலே ஒன்றும் செய்ய ஓடவில்லை. வீணை வாசித்தவர்களுடைய அஜாக்ரதையைப்பற்றி அவன் சிறிதும் கவலைப்படவில்லை அப்படியே அங்கே உட்கார்ந்துவிட்டான். வீணையைக் கையில் எடுத்து மடி மீது கிடத்திக்கொண்டு மனம்போன போக்கிலே கட்டைகளை நகர்த்தித் தந்திகளை மீட்டி வந்தான்.

பொழுதுபோவதே அறியாமல் அவன் உட்கார்ந்திருந்தான்: அவனை எழுப்பி நித்ய கர்மானுஷ்டானங்களைச் செய்யும்படி அறிவுறுத்துவதற்கு யாருக்கும் தைரியம் வரவில்லை. அரசன் வருகையை எதிர்நோக்கி அரண்மனை முழுதும் காத்துக் கிடந்தது.

அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்றும் சிலர் சந்தேகித்தனர். அவன் நடத்தையும் அவ்விதமே இருந்தது. ஸூர்யோதயம் ஆகி முதல் ஜாமம் முடிந்துவிட்டது. ராஜாங்க காரியங்களை முடிக்க மந்திரி வேங்கடமகி அரண்மனை ஆஸ்தானத்துக்கு வந்து மன்னன் பேட்டிக்குக் காத்திருந்தான். வழக்கம் போல. சபா மண்டபத்துக்கு மன்னன் வராத காரணத்தை விசாரித்து அறிந்தான்.

அரசனுடன் ஒரு சாலை மாணாக்கனைச் சிறிதும் ஏற்றத்தாழ்வில்லாமல் சங்கீதம் பயின்ற மந்திரிக்கு விஷயம் ஒருவாறு விளங்கியது. 'அரசனுக்குப் பைத்தியம் ஒன்றும் பிடித்துவிடவில்லை; புதிய பரீக்ஷை ஏதோவொன்றைச் செய்து கொண்டிருக்கிறான்' இதனை அவன் அறிந்துவிட்டான்.

அரசனைப் போலவே மந்திரிக்கும் கலைப்பித்து அதிகம். அரசாங்கக் காரியத்தை அப்படியே போட்டான். சபா மண்டபத்தை விட்டுக் கிளம்பி அந்தப் புறத்தை அடைந்து படிகள் மீதேறி உப்பரிகைக்குப் போய்விட்டான்.

மந்திரியைக் கண்ட அரசனுக்கும் முகத்திலே சிறிது தெளிவு உண்டாயிற்று. தன்னுடைய கவலையைப் பகிர்ந்து உடன் இருந்து ஆராய்ச்சி நடத்த ஒருவர் கிடைத்த சந்தோஷமே அதற்குக் காரணம் போலும்.

அவ்விருவரும் கூடிச் செய்த மாறுதலின் விளைவே வீணையின் தற்காலத்து அமைப்பு.

தேசாட்சி ராகத்திற்கு உரிய காலத்தில் நாட்டை ராகத்தின் ஒலியை மன்னன் கேட்டதாலே நேரிட்ட நன்மை இது. காலாதீதமான ராகத்தைக் கேளாமல். தேசாட்சி ராகமே அப்போது ஒலிக்கக் கேட்டிருந்தால் அவன் அதைச் சிறிதும் மனத்தாலே வாங்கியிருக்கமாட்டான்.

திடீரென ஏற்படும் குளிரால் நிமோனியா ஏற்படலாம்

தொண்டை, சுவாசப்பை, மார்பு வியாதிகளுக்குப் பெப்ஸ் சிறந்த நிவாரணி பாட்டில் ரூ. 1 வீதம் எங்கும் விற்கப்படுகின்றது

பெப்ஸ் உட்கொள்க:

PEPS

கிருமிநாசக சுவாச மாத்திரைகள்.

ஜோதிர்மண்டலம்

★

சித்ரபானுஞு ஆனிமீ

★

விசாகம்

இப்பக்கத்திலுள்ள படம், சென்னையில் இம்மாதம் முன்னிரவில் நமக்குப் புலப்படும் நக்ஷத்திரக் கூட்டங்களைக் காட்டுகின்றது. படத்திலுள்ளபடியே முதல் தேதியன்று இரவு சுமார் 10-30 மணிக்கும், 15-ம் தேதி யன்று 9-34 மணிக்கும், 30-ம் தேதி யன்று 8-35 மணிக்கும் நக்ஷத்திர மண்டலங்கள் காணப்படும். சென்னைக்கு வடக்கே தெற்கேயுள்ள இடங்களுக்கும் இப்படத்தை உபயோகிக்கலாம்.

படத்தை உபயோகிக்க:—எந்த திசையைநோக்கி நிற்கிறோமோ அந்த திக்கு அடிப்பாகமாக வரும்படி படத்தைத் திருப்பி வைத்துக்கொள்ள வேண்டியது. அப்பொழுது நம் எதிரில் உள்ள நக்ஷத்திரங்கள் படத்தில் அடிப்பாகம் முதல் நடு வரையில் காணப்படும்.

விருச்சிகம்

நக்ஷத்திரக் கூட்டங்கள் எல்லாவற்றிலும், தென் கிழக்கு வானில் இப்பொழுது விளங்கும் விருச்சிகக் கூட்டம் மிகவும் அழகு பொருந்தியது. பெயருக்குத் தகுந்தாற்போலவே, அது ஆகாயத்தில் வெகு அழகாக ஒரு தேளைச் சித்திரித்துக் காட்டுகின்றது. தலைப்பாகத்தில் சில அழகிய நக்ஷத்திரங்கள் வளைந்து அமைந்து இருக்கின்றன. உடலில் கேட்டை நக்ஷத்திரம் இருக்கிறது. அதன் வாலும் கொடுக்குமே, அழகிய பாகம். அதை பல பிரகாசமான நக்ஷத்திரங்கள் ஒருங்கே வளைந்து, நிமிர்ந்து, கொட்டவிருக்கும் கொடுக்கைக் காட்டுகின்றது. இதன் உருவம் எல்லா தேசத்தவர்களின் மனதையும் கவர்ந்திருக்கின்றது. சிலர் இக்கூட்டத்தைப் பாம்பிற்கு ஒப்பிட்டனர். சிலர் முதலையாகவும் கருதினர். ஓரியன் என்னும் வீரன் மமதையால் தன்னை அழிக்க இவ்வுலகில் எவ்வித பிராணியும் இல்லையென்று ஜம்பமாகப் பேசினான். அவன் அகம்பாவத்தை அடக்க கிரேக்க கடவுளான ஜூனோ இந்தத் தேளை சிருஷ்டித்தார். அது அவனைக் கொட்டி இறக்கவடித்ததாக கிரேக்கர்கள் கொள்கை.

இதன் முக்கிய நக்ஷத்திரம் கேட்டை. உடலின் நடு பாகத்தில் அமைந்திருப்பது. சிவந்த நிறம். (முதல்தர ஒளி) இதன் நிறத்தினலேயே இதை 'குஜனின் போட்டி' நக்ஷத்திரமாகக் கருதப்படுகிறது. ஆகாயத்தின் பாதுகாப்பாளிகளில் ஒரு திக்கில் அமைந்திருக்கும் வீரன்.

இது ஒரு இரட்டை நக்ஷத்திரம்: இதனுடன் இருக்கும் நக்ஷத்திரம் 7-ம் தரமானதால் நமக்குப் புலப்படாது. கேட்டை நம் சூரியனைப்போல் 30 மடங்கு இடையில் அதிகமானது. சூரியனைப் போல் 3600 மடங்கு அதிகமாக ஒளி வீசுகிறது. அதன் குறுக்களவு 275,000,000 மைல்கள்! இதனிடமிருந்து நமக்கு ஒளி வந்து சேர 275 வருஷங்கள் ஆகின்றன. சூரியனைப் போல் சுமார் 900 மடங்கு அதிக வெளிச்சத்தை மொத்தத்தில் வெளி விடுகிறது. மொத்தத்தில் இக்கூட்டத்திலிருக்கும் எல்லா நக்ஷத்திரங்களும் மகா பிரமாண்டமானவை. அதே எடையுள்ளவை. அதிக உஷ்ணமானவை. நம் பூமியிலிருந்து பல்லாயிர மைல் தூரங்களுக்கு அப்பால் இருப்பதால் நமக்கு ஒரு பிரகாசமான புள்ளிகளாகவே அவை தோன்றுகின்றன.

ஜோதிஷத்தில் பிரியமுள்ளவர்கள் பொருட்டு இம்மாதத்திய ராசி சக்கரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனிமீ 1௳

	சுக்கிரன்	புதன் சனி	சூரியன் குரு
கேது	8௳—ரிஷப-சுக்கிரன் 23௳மிதுன—புதன்		குஜன்
			ராகு

கிரஹங்களின் நிலை

புதன்:—இம்மாதம் 27-ம் தேதி வரை (11-7-42) ரிஷபக் கூட்டத்திலேயே ஊர்ந்து வருகிறது. மாத முதலில் வக்ரத்தில் இருக்கிறது, 10-ம் தேதியன்று வக்ரத்தியாக மடைகிறது. 27-ம் தேதிக்கப்புறம் மிதுனக் கூட்ட நக்ஷத்திரங்களிடையே புதனை விடியற் காலையில் காணலாம். மாதக் கடைசி வாரத்தில் தான் புதனைப் பார்ப்பது மிக சுலபம்

சுக்கிரன்:—மாத முதலில் மேஷத்திலும் 23-ம் தேதிக்கப்புறம் ரிஷபத்திலும் சுக்கிரன் தங்கி வருகிறது. கீழ்வானில் விடியற் காலையில் சுக்கிரனைக் காணலாம். அதன் ஒளி மற்ற எல்லாக் காக்ஷிகளையும் தோற்கடிக்கிறது. ஜுலை 4-ம் தேதியன்று சுக்கிரன சனிககருகில் காணப்படும். இக்காக்ஷி பார்க்கத் தகுந்தது.

குஜன்:—சென்ற மாதக் கடைசியில் கடகக் கூட்டத்தை அடைந்த குஜன் இம்மாதம் 28-ம தேதியன்று சிம்மத்திற்கு மாறுகிறது. மேல் வானில சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு குஜனைப் பார்ககலாம். இதன ஒளி அதிப் பிரகாசமாக இல்லாமற் போனலும், இதன் சிவந்த நிறம நம கவனத்தை இழுக்கிறது.

குரு:—இம்மாத மெல்லாம், மிதுனத்திலேயே கழிக்கின்றது. இம்மாதம் 11-ம தேதியன்று குரு சூரியனுடனேயே உதயமாகி அஸ்தமிககிறது. அதற்குப் பிறகு, சூரியனுக்கு முன்பே உதயமாகி வடுகிறது. அடுத்த மாதத்தில் குருவை சுலபமாக கீழ் வானில் காணலாம்.

சனி:—இம்மாதமும் ரிஷபத்திலேயே தங்கியிருக்கிறது. யூரானஸும், நெப்டியூனும், முறையே ரிஷபத்திலும் கன்னியிலும் ஊர்ந்து வருகின்றன.

பிறந்த வீடு

சிறு கதை

★

பூவாளூர் சுந்தரராமன்

விஷயம் மிகவும் அற்பம்தான், ஆனலும் கமலாவின் பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் கொஞ்ச காலமாக மனஸ்தாபம் இருந்தது. அது வரவர முற்றி வைரமும் பாய்ந்து விட்டது. கமலா அதற்காகத் தன் பிறந்த வீட்டார்களின் மீதோ அல்லது மாமியார் மாமனர் மீதோ புகார் சொல்லிவருத்தப்படவே இல்லை. ஆனலும் அவளுடைய மனம் தன்னல், பிணக்கப்பட்டுள்ள இரு குடும்பங்களுக்கும் உள்ள மனக்கசப்பைப் பொறுத்துக் கொள்ளச் சம்மதிக்கவில்லை.

விஷயம் என்னவோ மேலே சொன்னபடி மிகவும் அற்பம் தான். கல்யாணத்திற்கு முன்னல் இரு குடும்பங்களுக்கும் அவ்வளவு நெருங்கிய தொடர்பில்லை. ராஜகோபாலய்யர் தான் முதலில் 'பெண்ணைக் கொடுக்கிறேன்' என்று முன் வந்தார். சாம்பசிவ அய்யரும் பெண்ணைத் தானே நேரில் வந்து பார்த்தார். பார்த்து எடுத்து நிறுத்தின ஸ்வர்ண விக்ரகத்தை ஒத்த கமலா அவருடைய மனதிற்குப் பிடித்துத் தான் இருந்தாள். அவரே சீனுவுக்குக் கல்யாணமும் நிச்சயம் செய்தார். சாம்பசிவய்யர் சம்சாரம் சீதாலக்ஷிமி அம்மாள் போட்டுக் கொடுத்த 'லிஸ்டு' ப் பிரகாரம்தான் வெள்ளிப் பாத்திரங்கள், புடவைகள், நகைகள் எல்லாம் வாங்கப்பட்டன. கமலாவின் தாயார் மீனக்ஷி அம்மாள், தன் சம்மந்தி அம்மாள் ஆட்டி வைத்த ஆட்டத்திற்கெல்லாம் ஆளானள். ராஜகோபாலய்யருக்குத் தன்னைவிட கொஞ்சம் உயர்ந்த அந்தஸ்தில் பெண்ணைக் கொடுத்ததால் செலவு எதிர் பார்த்ததைவிட அதிகம் தான் ஆயிற்று. ஆதனல் என்ன? தன்னுடைய பெண் பெரிய குடும்பத்தில் வாழ்க்கைபட்டிருக்கின்ற பெருமை! கல்யாணத்திற்குப் பிறகு கடன்தான் மிஞ்சினது.

பிராமணுள் வீட்டில் கல்யாணம் என்பது துவஜாரோகணம். அதற்குப் பிறகுதான் செலவெல்லாம். எத்தனை திங்கள் நாகவல்லிகள்? எத்தனை சுமங்கலிப் பெண்டுகள்? எத்தனை நோண்புகள்? ஆடிக்கு மாப்பிள்ளை அழைப்பு; தலை தீபாவளி சீர்; சங்கராந்திப் பொங்கல்: மேலே மேலே செலவு தான். கடனுக்கு மேல் கடன் வாங்கி ராஜகோபாலய்யர் எல்லாவற்றையும் சிறக்கத்தான் செய்தார்.

விலை வாசி குறைந்தது. ராஜகோபாலய்யர் கையிலும் பண ஓட்டம் தடைப்பட்டது. அதற்குப் பிறகு தான் விவகாரம் மனஸ்தாபம் எல்லாம்! ருது சாந்தி முகூர்த்தத்திற்கு சீனுவுக்கு வைரக்கடுக்கன் போட வேண்டுமென்று பேச்சு. அதைப் போடவில்லை என்றுதான் மனஸ்தாபம். ஆனலும் கமலா புக்ககம் வந்துவிட்டாள். எடுத்ததற்கெல்லாம் அதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு சீதாலக்ஷிமி அம்மாள் கமலாவைக் கரித்துக் கொட்டுவாள்; அவளுடைய பிறந்த குடும்பத்தையும், பந்து வர்க்கங்களையும் பழிப்பாள். ஒரு நாள் பொறுக்கலாம்; இரண்டு நாள் பொறுக்கலாம். நித்யம் இதே ஒப்பாரியா?

அன்று வருஷப் பிறப்பு. காலையில இருந்தே வீட்டில் தடபுடல். அன்று பூஜைக்கும் விருந்திற்கும் வேலைகள் முழுமுரமாக இருந்தன. சீதாலக்ஷிமியிடம் என்னமோ வாங்க வந்த சேஷிப் பாட்டி, "கேட்டையோ சீதா, அம்மணி பேரனுக்குக் கல்யாணம் நிச்சயம் ஆயிடுத்து. கையிலே இரண்டாயிரம்; வெள்ளிப் பாத்திரம் எட்டுநூறு. காதுக்கு வைரக் கடுக்கன் முன்னூறு. மறந்துட்டேனே, நம்ப சீனுக்குக் கூட..."

"ஆமா, அந்த 'பேமானிகள்' சொன்னபடி எங்கே போட்டார்கள்? அதைச் சொன்ன 'இவளுக்கு மூக்குக்கு மேலே கோபம் வரது!'

கமலா கேட்டுக் கொண்டு தான் இருந்தாள். வருஷப் பிறப்பும் அதுவுமாக அவளால் அவளுடைய பெற்றோர்கள் கேவலமாகப் பேசப்படுவது கமலாவின் மனதை மிகவும் கலக்கி விட்டது.

"மாமி, அப்படியெல்லாம் பேசி விட வேண்டாம். கடுக்கன் எப்பொழுதாவது வந்துடும்; பேச்சு மட்டும் அப்படியே நிற்கும்!"

'உம், இன்னமே வரப்போறது. வரும் தினுசைப் பார்த்தாலே தெரியலையோ? மனுஷாளுக்கு பேச்சு சொன்னமேன்னு இருக்கனும்!

'எனக்கும் தெரியும், மாமி, நீங்க மாத்திரம் என்ன சொன்னபடி நடந்திண்டேள்? எனக்குப் போடறேன்னு சொன்ன நகை என்னத்தைப் போட்டேள்? எங்கப்பா போட்ட காப்பு, சங்கலி, தோடு எல்லாம். நல்ல புடவை கூட நீங்க இன்னும் ஒன்னும் வாங்கவில்லை. அதற்கே இவ்வளவு!'

இவ்வளவு தான் கமலா சொன்னது. ஆனல் சீதாலக்ஷிமிக்கு அது பிரமாதமாகப் பட்டு விட்டது. அதுவும் சேஷிப் பாட்டிக்கு எதிரில் தன்னை எதிர்த்தது இனிமேல் ஊரில் யாருக்குத் தெரியாமல் இருக்கும்? அன்று அவள் சாப்பிடவே இல்லை. சீனு கெஞ்சிப்பார்த்தான். கமலாவும் தன்னை மன்னிக்கும்படி எவ்வளவோ கேட்டுக்கொண்டாள். ஒரு பயனும் இல்லை. கமலா அந்த வீட்டில் இருந்தால் தன்னல் இருக்க முடியாது என்று சொல்லிவிட்டாள். அடுத்த நாள் கமலாவை பிறந்த வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள்.

2

ஒரு மாதம் கழிந்தது. அதற்குள் இரண்டுதட்வை கமலா சீனுவுக்குத் தன்னை மன்னித்து அழைத்துக்கொண்டு போகும்படி வெகுவாக வேண்டிக் கடிதம் எழுதியிருந்தாள். சீதாலக்ஷிமி இந்த சாக்கிலாவது வைரத்தோடு வரும் என்று தான் எதிர்பார்த்தாள். ஆனலும் மேலுக்குமேல் ராஜகோபாலய்யர் குடும்பம் க்ஷீணதிசை அடைகிறது என்பதைத் தெரிந்து கொண்டதும், அந்த எண்ணம் அவளுக்கு நிலைக்கவில்லை. வீட்டில் வேலை செய்யவும் அவளால் முடியவில்லை. கடைசியில் கமலாவைக்கொண்டு வந்து விடும்படிக் கடிதம் வந்தது. கமலா இரண்டாவது தடவையாக புக்ககம் புகுந்தாள்.

கமலா அங்கு நன்றாக நடத்தப்பட்டாளா இல்லையா என்பதை எல்லாம் பற்றி ராஜகோபாலயயர் கவலைப்படவில்லை. கவலைப்பட்டுத் தான் என்ன பிரயோஜனம்? அவருக்கு அவர்களிடம் என்ன மதிப்பு இருக்கிறது? மீனக்ஷி அம்மாளுக்கு மட்டும் உள்ளூர கவலையும் ஆதங்கமும் உண்டு தான், ஆனலும் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. பிறகு ஏதாவது வம்பு விளைந்து கமலாவை நிரந்தரமாகப் பிறந்த வீட்டிற்கே அனுப்பிவிட்டால் என்ன செய்வது என்ற பயம்.

இந்த நிலைமையில் கமலா ஆறுமாதங்களாக 'ஸ்நானம்' செய்யாமல் இருந்தாள். இந்த விஷயத்தைப்பற்றி அவள் பிறந்த வீட்டிற்குப் பிரஸ்தாபிக்கவே இல்லை: வளை காப்பும் சீமந்தமும் சீதாலக்ஷிமி தன் வீட்டிலேயே நடத்திவிட்டாள். ராஜகோபாலய்யருக்கு ஒரு 'முக்காலணு கார்டு' கூட கிடையாது! ஆனல் முகூர்த்தங்கள் நடந்த விஷயம் ராஜகோபாலய்யர் காதில் விழத்தான் விழுந்தன. அவர் இருந்த பண முடையில் 'காசு லாபந்தான்; அவர்கள் செய்து கொண்டால் செய்துகொள்ளட்டுமே' என்று சொல்லிவிட்டார். கமலாவும் ஒரு ஆண் குழந்தைக்குத் தாயாரானள். அந்த இன்பத்தை அவளால் அநுபவிக்க முடியாத வருத்தம் இருந்தது. மேலுக்குத் தன் பிறந்த வீட்டாரைப்பற்றி ஒன்றும் நினைக்காதவள்போலக் காணப்பட்டாலும், 'நீத்த சாம்பலுக்குள் காணப்படும். பூத்த நெருப்பைப் போல' மனதில் தன் தயாரின் அன்பு, தகப்பனரின் வாஞ்சை, பிறந்த வீட்டுப் பாசம் யாவும் சேர்ந்து குமுறிக்கொண்டிருந்தது.

3

கமலாவின் பெரிய தகப்பனர் இறந்துவிட்டார் என்று கடிதம் வந்திருந்தது. கடிதம் அவளுடைய தகப்பனர்தான் போட்டிருந்தார். வீட்டில் எல்லாரும் ஒரு 'முழுக்கு' த்தான் போட்டார்கள். எப்படியும் 'தசாஸ்து'க்குத் தன் பிறந்த வீட்டிற்குப் போக நேரிடும் என்று ஆசை, கமலாவிற்கு இருந்தது. கமலாவின் பெரிய தகப்பனர் போன துக்கத்தின் நடுவே பிறந்த வீட்டாரின் சல்லாபங்களை அடைய நேரிடும் இன்பம் பெரிதாகத்தான் அவளுக்குத் தோன்றியது! அதற்கும் அவளை அனுப்பவில்லை. அவளுக்கு அதில் ஏற்பட்ட வருத்தம் கொஞ்சநஞ்சமல்ல. 'எங்கேயாவது சாவைத் தள்ளுவதுண்டா? அதற்கு எங்க அப்பா என் தப்பு செய்தார்? கையில் இல்லாதது ஒரு தப்பா?' என்று அவள் நினைத்தாள்.

அடுத்த வருஷம் அவளுடைய தங்கை பத்மாவுக்குக் கல்யாணம் நடந்தது. அதற்கும் அவளை அனுப்பவில்லை. அந்த மன வருத்தமெல்லாம் வரவர அதிகரித்து அவளுக்கு அந்த வீடு ஒரு 'அந்தமான்' போலத் தென்பட்டது. ஆம், அவள் பிறந்து வளர்ந்த வீட்டையும், ஓடி ஆடி விளையாடின ஊரையும் ஆற்றங்கரையையும், பேசிச் சிரித்துப் பழகிய முகங்களையும் எத்தனை நாள் மறந்து இருக்க முடியும்? எத்தனை நாள் பார்க்காமல் இருக்க முடியும்? இந்த பிறந்த வீட்டின் பாசம் அவளுடைய புக்கக வாழ்க்கையையே பரிசோதிக்கத் தொடங்கி விட்டது. இந்த நிலையில் அவளுடைய கைக் குழந்தையும் மாந்தத்தால் இறந்தது. வரண்ட பாலைவனத்தில் வளர்ந்திருந்த வேல மரமும் பட்டுப் போய் விட்டது!

4

ராஜகோபாலய்யருக்கு உடம்பு சௌகரியமில்லை. என்னவோ வியாதி, 'பிழைத்து விடுவார், என்ற நம்பிக்கை மருந்து கொடுக்கும் டாக்டருக்கோ, கஞ்சி கொடுக்கும் மீனக்ஷி அம்மாளுக்கோ இல்லை. ஆனலும் மருந்தும் கஞ்சியும் வேளா வேளைக்குக் கொடுத்துக் கொண்டுதான் வந்தார்கள்.

ராஜகோபாலய்யர் 'கண் மூடு'வதற்கு முன் தன் ஜேஷ்ட குமாரத்தி கமலாவை ஒரு முறை பார்க்க விரும்பினர். வீட்டில் முதல் செல்லக் குழந்தை அவள் தான். அவள் வீட்டில் இருந்த வரையில் எல்லாம் சௌகரியமாகத் தான் இருந்தது. அவளுக்குக் கல்யாணமாகி புக்ககம் போன பிறகு தான் அவருக்கு எல்லா கஷ்டமும். ஆயிரம் ஆயிரமாக வாய்ப் பேச்சுக்குக் கொடுத்தவர்கள் இப்பொழுது பத்திரத்திற்கோ பாண்டுக்கோ நூறு, ஐம்பது கூடக் கடன் கொடுக்க முன் வரவில்லை. ராஜகோபாலய்யர் தன் மானம், கௌரவம், பௌருஷம் எல்லாவற்றையும் துறந்து தன் சம்பந்திக்கு, தன் பெண்ணை தன் அந்திய காலத்திலாவது அனுப்பி வைக்க வேண்டுமென்று கடிதம் எழுதியிருந்தார். பதிலே கிடையாது. அடுத்தடுத்து மூன்று கடிதங்கள் வந்து விட்டன.

கடைசி கடிதம் ஒரு கார்டு தான். அது கமலாவின் கையில் தான் கிடைத்தது. அது அவளுடைய புருஷனுக்குத்தான் எழுதப்பட்டிருந்தது. இரண்டே வரிகள். கமலாவை அடுத்த

தினமாவது. அனுப்பாத பக்ஷத்தில் தன்னுடைய 'முகாலோபனம்' கூடக் கிடைக்காதென்றும், அவள் தன்னுடைய மகள் என்ற உரிமையையும் இழந்து விடுவாள் என்றும் ராஜகோபாலய்யர் எழுதியிருந்தார். மனதில் பெரும் புயல். புயலிலே அகப்பட்ட கொடிபோல் அவளுடைய ஹிருதயம் நாலாபக்கங்களிலும் பிய்க்கப்பட்டிருந்தது.

சாயந்தரம் சீனு ஆபீஸிலிருந்து வந்ததும் கடிதத்தை அவன் கையில் கொடுத்தாள். அவன் படித்துப் பார்த்துவிட்டு. 'அம்மா அப்பாவிற்குத் தெரியுமா?' என்று கேட்டான்.

'தெரியாது. கடிதம் உங்களுக்குத்தான்.'

'சரி' அம்மாவைக் கேளு!!

'மாமியைக் கேட்டா போகச் சொல்லப்போறதென்னமோ இல்லே!'

'அப்படின்னு போகத்தான் கூடாது!'

'இல்லே நான் போகத்தான் வேண்டும்!' இந்த துணிவான பதிலை சீனு எதிர்பார்க்கவில்லை.

சீனு 'நான் சொன்னால் கூட வா!' என்று அதட்டிக்கேட்டான்.

'ஏன், யார் சொன்னாலும் அப்படித்தான்.' என்று சொல்லும்போதே கண்களில் நீர் மளமளவென்று பெருகத் தொடங்கி விட்டது. ஒரே ஆவேசம் வந்தவள் போல, 'பெற்ற தகப்பன் காகக் கிடக்கிறான். என்னை அருமையாக வளர்த்து பணத்தாலும் தேகத்தாலும் என்னை ஆளாக்கி, உங்களிடம் சேவகம் செய்வதற்கு அனுப்பினதற்கு அது தானே பிரதி பிரயோஜனம்? இனி ஒரு நிமிஷங் கூட எங்க அப்பாவைப் பார்க்காமல் இருக்கமுடியாது' என்று அழுதுகொண்டே சொன்னாள்.

'உங்கப்பன் வீட்டிற்குப் போனால் எனக்கும் உனக்கும் உள்ள பாத்தியம் போய்விடும். உன் இஷ்டம் போல் செய்!' என்று சீனு சொன்னான்.

'எனக்கு வேறு வழியே கிடையாது. என் அருமைத் தகப்பனார் மனம் மடிந்து சாகும் பொழுது கூட முகத்தைப் பார்க்க கொடுத்து வைக்காமல் இருக்கும் அநியாயத்தைவிட இந்த உலகத்தில் என் எந்த உரிமையும் திரஸ்கரிக்கின்றேன். தயவு செய்து இப்பொழுது வண்டி கொண்டுவரச் செய்யுங்கள். நான் இதோ புறப்பட்டுவட்டேன்' என்று சொல்லிக் கொண்டே சமையலறைக்கு ஓடிவிட்டாள்.

சிறிது நேரத்தில் வண்டி வந்தது. கலங்கிய கண்களுடன் கமலா வண்டியில் ஏறிக்கொண்டதைத் தெரிந்து கொள்ளாத குதிரை வெகு வேகமாக ரயில்வே ஸ்டேஷனை நோக்கி ஓடிற்று.

5

'கமலா கமலா, வா அம்மா இன்னமே எனக்கென்ன குறைச்சல்? நீ இந்த வீட்டை விட்டுப் போனே, எல்லாம் போயிடுத்து' என்று சொல்லி அணைத்து கொண்டே ராஜகோபாலய்யர் கண்ணை மூடிவிட்டார்.

சிறுவர் பகுதி

★

முழு மூடர்

★

ஸ்ரீமதி ரத்னா பாய்

பரமானந்த யோகிக்கு நகரத்தில் வாசம் கிடையாது! காட்டில் தான். அவர் உலகத்தில் எல்லாம் அநித்தியம் என்று எண்ணுபவர்: புத்தியோ நுனிமரத்தில் உட்கார்ந்துகொண்டு அடிமரத்தை வெட்டும் புத்தி. இவருக்கு வாய்த்த சிஷ்யர்களோ அடிமுட்டாள்கள். குரு ஒன்று சொன்னால் இவர்கள் வேறு ஒன்று செய்வார்கள். இவருக்கு மூன்று சிஷ்யர்களே இருந்தனர். மூன்று பேர்வழிகளும் முக்கோணல் புத்தியுடையவர்களே என்பதில் ஆச்சரியமெதுவுமில்லை.

குருவினுடைய சட்டை கொஞ்சம்கிழிந்திருந்தது. இதை தைப்பதற்காக நகருக்குள் சென்று ஊசி ஒன்று வாங்கிவருவதாக குருவிடம் சொன்னார்கள். குரு பரமானந்தயோகியும் "அப்படியே சென்று பத்திரமாக வாங்கி வாருங்கள்" என்று கட்டளையிட்டார்.

சிஷ்ய கோஷ்டியர் கடையில் வந்து ஒரு ஊசியை வாங்கிக்கொண்டனர். ஊசியோ சின்னது. இதை இத்தனை பேர் எப்படி தூக்கிக் கொண்டு போகிறது என்று யோசனை செய்தார்கள். அங்கு வழியில் பனைமரம் ஒன்று விழுந்து கிடந்தது. அதில் ஊசியைச்சொருகி விட்டு அந்த பனை மரத்தை தூக்கிக் கொண்டு மூவரும் குருவிடம் வந்து அவர் முன் தொப்பென்று பனைமரத்தைப் போட்டார்கள். விழுந்த அதிர்ச்சியில் ஊசி மண்ணில் மறைந்து விட்டது. சிஷ்யர்கள் தேடினார்கள். அகப்படவில்லை! மரத்தை உருட்டிப் புரட்டிப் பார்த்தார்கள். எப்படி பார்த்தும் அகப்படவில்லை. குருவிடம் போய், "நாங்கள் ஊசி வாங்கி வந்தோம்! இதை இத்தனை பேர் எப்படி தூக்கிக் கொண்டு வருகிறதென்று அங்கு கிடந்த பனைமரத்தில் சொருகி அதை நாங்கள் தூக்கி வந்தோம். எங்களை ஏமாற்றி எப்படியோ ஊசி ஓடிப் போய்விட்டது" என்று சொன்னார்கள். குரு கோபத்துடன் "மூடர்களே! இத்தனை பேர் இருந்தும் ஊசி போனது கண்டு பிடிக்க முடியவில்லையே" என்றார்.

சில நாள் சென்றது. குருவிற்கு குதிரை சவாரி செய்ய வேண்டும் என்ற ஆசை நெடுநாளாக உண்டு. சிஷ்யர்களைக் கூப்பிட்டு "சிஷ்யர்களே, குதிரை சவாரி செய்ய வேண்டும். அதற்காக எனக்கு குதிரை ஒன்று சொந்தமாக வாங்க வேண்டும். பெரிய குதிரை வாங்கினால் நம் சொற்படி நடக்காது. குட்டியாக பார்த்து வாங்கினால் நாம் அதை பழக்கிக் கொள்ளலாம்" என்றார் பரமானந்த யோகி.

சிஷ்யர்கள் பணத்தை எடுத்துக் கொண்டு குதிரை வாங்க பயணமானார்கள். ரொம்ப தூரம் நடந்த களைப்பால் மரத்து நிழலில் சற்று உட்கார்ந்தார்கள். அங்கு அவர்களுக்கு தூக்கம் வரவே, பண மூட்டையை மரத்தின் கிளையில் கட்டி விட்டு சற்று நேரம் தூங்கலாம் என்று படுத்துத் தூங்கினார்கள்.

எங்கிருந்தோ குரங்கு ஒன்று வந்து இவர்கள் கட்டி வைத்திருந்த பண மூட்டையை சாப்பாட்டு மூட்டை என்று எண்ணி அதை அவிழ்த்துக் கொண்டு, இவர்கள் மேல் அக்கிளைகளில் கிடந்த இலைகளை உருவிப் போட்டுவிட்டு ஓடிப்போயிற்று. இதற்குள் இவர்கள் விழித்துக் கொண்டு, தங்கள் பண மூட்டையை குரங்கு தூக்கிக் கொண்டு போவதைப் பார்த்து துரத்திக் கொண்டு ஓடினார்கள். குரங்கா இவர்களுக்கு அகப்படும்? குருவிற்கு 'குதிரை' வாங்க பணம் இல்லையே என்று கவலைப்படலானார்கள். அப்போது ஒரு வழிப் போக்கன் தென்பட்டான். அவனிடத்தில் இவர்களுடைய குறைகளைச் சொன்னார்கள். அவன் இவர்கள் முழு மூடர்கள் என்பதை உணர்ந்து கொண்டு தன்னிடத்தில் இருக்கும் இருகண் பொட்டையாகி தன்னால் தீனி போட முடியாமல் இருந்த ஒரு கிழ குதிரையை இவர்களுக்குக் கொடுத்தான். மூன்று மூடர்களும் குதிரை என ஒன்று அகப்பட்டதே. போதுமென ஆர்ப்பரித்து அக்கிழ குதிரையின் கழுத்தில் கயிறைக்கட்டி இழுத்துக் கொண்டு வந்தார்கள். குரு பரமானந்த யோகிக்கு குதிரையைக் கண்டவுடனே பரமானந்த முண்டாயிற்று.

"சிஷ்யர்களே! இன்றே நல்ல நாள். இன்றைக்கே குதிரை சவாரி செய்ய வேண்டும்" என்று குதிரை மேல் ஏறிக் கொண்டார். கிழ குதிரையை கழுத்தைப் பிடித்து இரண்டுபேர் இழுக்க ஒருவன் பின்னால் இருந்து தள்ள மெதுவாக குதிரையும் நகர்ந்தது.

இவர்கள் போகும் வழியில் தரைக்கிணறு ஒன்று இருந்தது. இவர்கள் இழுக்கிற ஆர்ப்பாட்டத்தில் கிணற்றைக் கவனிக்கவில்லை. குதிரைக்கு வலி பொறுக்க முடியாமல் எகிறிக் குதிக்கவே, குதிரை மேல் இருந்த குரு கீழே விழுந்து புரண்டு கிணற்றில் விழுந்தார்.

கிணற்றிலிருந்து குரு வெளி வராமையால் சிஷ்யர்கள், பாதாளத்தில் போய் இருக்கிறார் குரு, அங்கு குதிரையை தேடுவார் என்று எண்ணி, கிழ குதிரையையும் கிணற்றில் தள்ளி விட்டு திரும்பிப் பார்க்காமல் ஓடி விட்டனர்.

நவநாகரீகம்

★

ஒரு நகை.

★

காசினி எழுதியது

* * * 'கலி முத்தி விட்டது என்பதுக்குச் சந்தேகமே இல்லே!' என்று கூறிக் கொண்டே என் அத்தை உள்ளே வந்தாள்.

'அது தான் தெரிந்து கிடக்கிறதே! அவள் பாடாம் கலில் இட்டு. பட்டக்காரை தலையில் இட்டு, இம், பாக்கி மறந்து போச்சுது! வயசு ஆரதே இல்லேயோ? விராடன் பெண்டாட்டி இப்படித் தாறுமாறாக அலங்காரம் பண்ணிக் கொண்டிருந்தாளாம்—!" என்று என் அத்தையின் கூட உள்ளே வந்த எங்கள் பக்கத்தாத்துப் பங்கஜத்தின் மாமியார் சொல்லிக் கொண்டே இருக்கும்போதே:— 'என்ன விசேஷம்?' என்று என்னுடன்கூட இருந்த நளினா தேவி கேட்டாள்.

என்னுடைய அத்தையும் பங்கஜத்தின் மாமியாரும். அன்று காலை போஜனம் ஆனவுடன், நீங்கள் ஷாபிங் என்று போகிறீர்களே இல்லேயோ? நாங்கள் இன்று பாத்திரக் கடை, இரும்புக் கடைகளுக்கு எல்லாம் வீட்டுக்கு வேண்டிய சில சாமான்கள் வாங்க ஷாபிங் போகப் போகிறோம்!' என்று புறப்பட்டார்கள். பஸ், டிராம் இவைகளில் சரியாக இவர்களுக்கு ஏறத் தெரியணுமே என்று எங்களுக்கு விசாரம் தான். ஆனால் எங்கள் ஒத்தாசை தங்களுக்குச் சிறிதும் தேவையில்லே என்று ஒரே பிடியாகச் சொல்லிவிட்டார்கள். சென்றவர்கள் தான் இவ்விதம் கலியின் மகிமையை மெச்சிக் கொண்டு, உள்ளே வந்தார்கள்.

'விராடன் பெண்டாட்டிக்கு எந்த நகையை எப்படிப் போட்டுக்கணும் என்பது தெரியாது! இவள் அப்படி இல்லேயே? வேணும் என்று தானே இப்படிப் போட்டுக்கொண்டிருந்தாள்!' என்று என் அத்தை சொன்னாள்.

பிறகு சமாசாரத்தைச் சொன்னார்கள்; இவர்கள் வந்த பஸ்ஸில் சுமாருக்கு இருபது, இருபத்தைந்து வயசு மதிக்கத் தக்க ஒரு பெண்ணும் ஏறினாளாம். 'இவள் சலங்கைகள் கொத்துக் கொத்தாகக் கோத்து, மிகவும் நாசூக்காகச் செய்யப்பட்டிருந்த ஒரு பாதசரத்தை, வளையலுக்கு பதிலாக இரண்டு சுத்தாக வலது கையில் சுத்தி, இடது கையில் கை கெடிகாரம் போட்டிருந்தாளாம். இந்தப் பாதசர—வளையலைக் குறித்துத்தான் இவர்கள் பேசினது.

'என்ன நான் புதிய தினுசில் அலங்காரம் செய்து கொள்ள வேண்டும், இது என்ன என்று மற்றவர்கள் கவனம் சட்டென்று நம்மசிங்கார முறையில் செல்ல வேண்டும் என்ற ஆசை இருந்தாலும், பாதசரத்தை, அதுவும் தங்கம் கூடத் தோய்க்காத வெள்ளி நகையை. ஒருத்தி வளையலுக்கு பதில் போட்டுக் கொள்ளுவாளோ?' என்று நளினாதேவி நீண்டதொரு வாக்கியத்தில் ஆக்ஷேபித்தாள்.

'ஆனால் நாங்கள் பொய் சொல்லுகிறோமோ?' என்று என்னுடைய அத்தை சட்டென்று கோபித்துக் கொண்டாள்.

'நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள் என்று சொன்னேன்? ஒருவேளை பாதசரம் கழண்டு இருக்கும்; திருகு கெட்டுப் போயிருக்கும்; வைக்க வகையில்லாமல் வீடு போய்ச்சேரும் வரையில் கையில் சுத்தி இருப்பாள் என்றாள் நளினாதேவி,

'நீ ஒன்றும் அவளுக்கு வக்காலத்து வாங்க வேண்டாம்! நாங்கள்தான் நன்று கவனிச்சோமே, கையில் சுத்தித் திருக்கி கொண்டிருந்தாள். கையில் வேறு நகையில்லே. காலில் சடா போட்டிருந்தாள்!' என்று என் அத்தை தீர்மானமாகச் சொன்னாள். இது விஷயம் உன் 'அபிப்பிராயம் என்ன?

பாத்திரங்கள்

இப்படி நூதன முறையில் நகைகளை அணிவதைப் பற்றி நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே 'ஏன் அத்தை பாத்திரம், பண்டம் ஒன்றுமே நீங்கள் வாங்கவில்லையா? வெறுங்கையுடன் வந்திருக்கிறீர்களே?' என்று நான் கேட்டேன்.

'வாங்காமல் என்ன? எல்லாம் வாங்கி இருக்கோம். ஒரு கூலியாளிடம் கொடுத்திருக்கோம்; அவன் கொண்டு வருவான்!' என்று என்னுடைய அத்தை சாவதானமாகப் பதில் சொன்னாள்.

'கூலி யாளிடம் கொடுத்தீர்களா? பட்டணம் தெரிந்தும் இப்படிச் செய்யலாமோ? அவன் கொண்டு வந்து கொடுப்பான் என்று என்ன நிச்சயம்?' என்று நானும், 'இனி மேல் அந்தப் பாத்திரங்களுக்கு ஆசைப் படாதேயுங்கள்! ஒரு துளசி தளத்தை வைத்துக் கொடுத்த மாதிரித்தான்!' என்று நளினாதேவியுமாகச் சொன்னோம்.

புதிய தம்பதி: காப்டன் கோல்ஸ் மிஸ் ப்ரிட்ஜட் ஹோப். சமீபத்தில் சென்னை கவர்னர் மே. த. ஸர் ஆர்தர் ஹோப்பின் புத்திரியுடைய விவாகம் நகரில் நடைபெற்றது. (பி.பி. பி.)

'பாத்திரம் கனத்தது; பஸ்ஸில் ஒரே கூட்டமாக இருந்தது! எல்லாம் யோசிச்சுத்தான் செய்தோம்!' என்றாள் பங்கஜத்தின் மாமியார்.

(28-ம் பக்கம் பார்க்க)

திருக்கோவிலூரில் ஸ்திரீகள் மகாநாடு

சென்ற மாதம் சிறு மதுரையில் நடந்த திருக்கோயிலூர் ஸ்திரீகள் மகாநாட்டில் இந்தியா சட்டசபை மெம்பர் ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் தலைமை வகித்தார். (என்.என்.பி.எஸ்.)

தலையில்.

தலைமயிர் தெரிகிறதா அல்லது அடித்தலை தெரிகிறதா அடிதலை புலப்படும் பக்ஷத்தில், உதிர்ந்த கேசராசிகளுக்குப் பதில் புதுக்கூந்தல் முளைக்கவில்லை என்பது நிச்சயம். அச்சமயம் கேசவர்த்தினியைக் கொண்டு பரிஹரிக்காமல், பாதி வழுக்கையைப் பூரண வழுக்கையாக விடுவானேன்? வழுக்கையால் ஏற்படும் கிழத்தோற்றத்தையும் அனுபவிப்பானேன்?

உதிர்ந்த இலைகள் மறுபடி முளைத்துவிடும். ஆனால் சில சமயங்களில் உதிர்ந்த கூந்தல் சிகிச்சையில்லாமல் முளைப்பதில்லை. அச்சமயங்களில் கேசவர்த்தினியை உபயோகித்து மயிர் உதிர்வதை நிறுத்தி இளங்கூந்தலையும், இளமையையும் ஒருங்கே பெறுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக்காப்பது; விருத்திசெய்வது; அழகுபடுத்துவது விலை அணா 12; மேற்செலவு வேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலை,

ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

சபதம்

★

மஹாகவி டாகூர் எழுதியது

(சென்ற வாரத் தொடர்ச்சி)

3

கிராமத்திற்கு வந்ததும் பால்யத்தில் செய்துகொண்டிருந்த சிவ பூஜை அனுஷ்டானம் முதலியவைகளைச் செய்ய வேண்டுமென்று மனதில் ஆர்வம் பொங்கி எழுந்தது. என் மனமும் வாழ்க்கையும் பரிபூர்ணமாக பகவானிடத்தில் லயித்து விட்டன. 'கடவுளே, என் கண்களின் ஒளி மங்கிவிட்டது. அதுவும் ஒருவிதத்தில் நல்லதுதான். ஆனால் நீர் மாத்திரம் என்னை விட்டு அகலவே கூடாது...... ஸ்வாமீ, நான் மறந்துவிட்டேன், நீர் என்னுடையவராக இருப்பது நடக்காத காரியம்! நான் உம்முடையவளாயிருக்கிறேன்'' என்று சொல்லத்தான் எனக்கு அதிகாரமுண்டு என நினைத்தேன்.

சிறிது காலம் நாங்கள் சுகமாக இருந்தோம். வைத்தியத் தொழிலில் என் கணவருடைய பெயர் பிரசித்தமாயிற்று. கையில் கொஞ்சம் பணமும் சேர்ந்தது.

ஆனால் பணம் மாத்திரம் நல்ல பொருளில்லை. மனம் மாறிவிடுகிறது. மனம் போன வழியே பணம் அதைத் தூண்டிவிடும். ஆனால் தனம் எப்பொழுது நம்மை விட்டு விலகுகிறதோ அப்பொழுது மனமும் வேறு கெட்ட விஷயங்களில் சென்று புண்ணாக்கிக் கொள்வதில்லை. முதலில் இருந்த நிலைக்கே வந்து விடுகிறது. அச்சமயம் சுகத்திற்குப் பதிலாகக் கஷ்டமே சன்மானமாக கிடைக்கிறது.

நான் எந்த அவசியமில்லாத விஷயங்களையும், கடந்துபோனவைகளைப் பற்றியும் வர்ணனை செய்யவில்லை. ஆனால் குருடர்களுக்கு அனுபவ சக்தி அதிகம்! நான் எந்தக் காரணத்தால் ஒருவரை முன்பு தெரிந்து கொள்ளவில்லையோ அவரை இப்பொழுது நன்றாகத்தெரிந்து கொண்டேன். வருவாய் அதிகமாகவே என் கணவருடைய நடத்தையிலும் மாறுதல் தென்பட்டது. வாழ்க்கையின் முதல் அத்தியாயத்தில் என் கணவர் நியாய அநியாயம், தர்மாதர்மம், இவைகளைப் பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருப்பார். ஆனால் அது இப்பொழுது இருந்த இடமே தெரியாமல் எங்கோ போய் மறைந்து கொண்டது.

''நான் என் வாழ்க்கையில் பணம் சம்பாதிப்பதற்காக வைத்திய வித்தை கற்றுக்கொள்ளவில்லை. ஏழைகளுக்கு ஏதாவது வியாதி ஏற்பட்டால் அதைப் போக்குவதற்காகவே!'' என்றார் என் கணவர்.

பணமில்லாமல் வியாதியஸ்தன் வீட்டிற்குப் போய் நாடி பார்க்க எந்த டாக்டரும் இசைவதில்லை. அம்மாதிரியான சமயங்களில் மனம் பணத்தை எண்ணி மாறிவிடும். ஆனால் என் கணவருடைய மனம் முன்போலில்லை என்பது மட்டும் எனக்கு நன்றாகத்தெரியும். ஒரு நாள் அதிகாலை ஏழைக் குடியானவனொருவன் தன் குழந்தையின் உயிரைக் காப்பாற்றும்படி என் கணவருடைய காலைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினான். ஆனால் அவன் வெறுப்புடன் அவரை விட்டுப்போனான். நான் அந்தக் குடியானவனிடம் என் அடையாளத்தைக் கூட்டக் கொடுத்தனுப்பினேன். அப்பொழுதும் என் கணவர் அவனுக்காக இரக்கம் காட்டவில்லை.

யாரோ ஒரு தனவானுடைய வேலைக்காரன் ஒருவன் வந்து என் கணவரிடம் இரண்டு நாட்கள் வரை ஏதேதோ பேசிவிட்டுப் போனான். அவர்கள் என்ன பேசினார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் வந்தவர் போன பிறகு என் கணவர் என்னிடம் அநேக விஷயங்களைப் பற்றிப் பேசினார். அச்சமயம் என் குருட்டுக் கண்ணால் உற்றுப் பார்த்து வந்த மனிதனுடைய பேச்சில் மயங்கி ஏமாந்து போயிருக்கிறார் என்று தெரிந்து கொண்டேன்.

கண்களின் ஒளி மங்குவதற்கு முன் பார்த்த என்னுடைய கணவர் இப்பொழுது எங்கே இருக்கிறார்? யார் என் பார்வையில்லாத கண்களின் அருகில் முகத்தை வைத்து என்னுடைய ஸ்தனங்களில் கண்ணீரால் அபிஷேகம் செய்தாரோ அவருக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்?

நாளுக்கு நாள் ஏற்படும் மனோவேதனை புகைந்து காட்டுத்தீ போல பெரிதாகப் பற்றி எரிகிறது. வெளிப்புறம் கிளம்பும் தீயச்செயல்கள் உள்ளே இருப்பதை மலைபோல் கிளப்பி மறைக்கின்றன. நான் அதைத்தடுக்க ஒரு உபாயத்தைக் கண்டுபிடிக்க எண்ணினேன், ஆனால் கிடைக்கவில்லை.

4

கணவரை என் கண்களால் பார்க்க முடிவதில்லை என்பது ஒன்றும் அதிசயப்படும்படியான விஷயமில்லை. எனக்கு எனக்கு எந்த இடத்தில் கணவர் இருக்க வேண்டுமோ அந்த ஸ்தானத்தில் அவர் இல்லை என்பதை நினைக்கும் பொழுது என் மனம் படபடக்கிறது. நானோ குருடி. வாழ்க்கையிலிருந்து விலக்கப்பட்ட நவீனப் பிரேமை, பக்தி இவைகளை ஆதாரமாகக் கொண்டு இருப்பவள். வாழ்க்கையின் ஆரம்பத்தில் என்மனக் கோயிலில் ஸ்தாபிதப்படுத்தி வைத்திருந்த பொருள் இது வரையில் அங்கேயேதான் இருக்கிறது. மேலும் என்கணவர் நவநாகரீகமான தேசத்தை விட்டு விட்டு பணம் சம்பாதித்து வாழ்க்கையை நடத்துவதற்காக வெளி தேசங்களுக்குப் போகாமல் வேறு எங்கே செல்வார்! எதில் நம்பிக்கை வைத்திருந்தேனோ, எதை முக்கியமான கடமை என்று எண்ணியிருந்தேனோ, எந்த சுகத்தை எல்லாவற்றிலும் மேலானதாகக் கருதினேனோ—அவைகளை யெல்லாம் என் கணவர் சற்று விலகி நின்று பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தார், ஆனால் அவைகளை என் மனதிலிருந்து அவர் பிரித்துவிடுவார் என்று எண்ணவேயில்லை. வாழ்க்கையின் ஆரம்பத்தில் நாங்கள் இருவரும் ஒரே வழியைக் கடைப்பிடித்து அதிலேயே சென்று கொண்டிருந்தோம். எப்படி நாங்கள் இருவரும் சேர்ந்து அவ்வழியைக் கடைபிடித்தோம் என்பது எங்கள் இருவருக்குமே தெரியாது. இன்று நான் அவ்வழியே செல்ல அவரை அழைக்கிறேனேயொழிய அவரிடமிருந்து யாதொரு அழைப்பும் வரவில்லை.

நான் குருடியாயிருப்பதால் ஏதாவது ஒரு சிறு விஷயத்தையும் பெரிதாக எண்ணி விடுவேன். எனக்கு கண்களின் பார்வையிருந்தால் அப்படி நினைக்க முடியாது!

ஒரு நாள் அதிகாலை; கிழ முஸல்மான் ஒருவன் தன் பேத்தியின் காலரா வியாதிக்கு வைத்தியம் செய்ய என் கணவரைக் கூப்பிட்டுக் கொண்டு போக வந்தான்.

''டாக்டர் பாபு, நான் மிகவும் ஏழை-கடவுள் உங்களுக்கு மேன் மேலும் அருள் புரிவார்!'' என்றான் கிழ முஸல்மான்.

''கடவுள் அருள் புரிவதால் ஒன்றும் நம் வேலை நடந்து விடாது. முதலில் நீ என்ன செய்வாய் என்பதைச் சொல்லு?'' என்றார் என் கணவர்.

அதைக் கேட்டதும் நான் என் மனதிலுள்ளேயே 'கடவுள் என்னைக் குருடியாக்கி விட்டார். ஆனால் ஏன் செவிடாக்கவில்லை?' என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டேன்.

கிழவன் ஒரு நீண்ட பெருமூச்சை விட்டு ''அடே கடவுளே!'' என்று மட்டும் சொல்லி வெளியே போய் விட்டான்.

நான் அப்பொழுது என் வேலைக்காரியின் மூலம் அந்தக் கிழவனைக் கூப்பிட்டு ''பாபு, நான் உங்கள் பேத்தியின் வைத்தியத்திற்காகப் பணம் கொடுக்கிறேன். நீ என் கணவருக்கு நல்ல வாக்கு கொடு இந்த வீட்டிலிருக்கும் டாக்டர் ஹரீஷ் பாபுவைக் கூட்டிக் கொண்டு போய் காண்பியுங்கள்'' என்றேன்.

அன்று பகல் பூராவும் சாப்பாடு தண்ணீர் எதிலும் மனம் செல்லவில்லை. பகல் தூங்கி எழுந்ததும் என் கணவர் ''இன்று நீ ஏன் ஒருவிதமாயிருக்கிறாய்?'' என்று முன் போலவே கேட்டார். நான் 'இல்லை. ஒன்றுமில்லை' என்று பதில் சொல்ல எண்ணினேன். ஆனால் அம்மாதிரிச் சொல்லும்காலம் மலையேறிவிட்டது. நான் அவர் அருகில் போய் மெதுவாக ''ரொம்ப நாளாக உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டுமென்று எண்ணியிருந்தேன். ஆனால் சொல்ல வேண்டும் என்று நினைக்கும் பொழுது அது மறந்து விடுகிறது. என் மனதில் உதிக்கும் விஷயங்களை உங்களிடம் சொல்லுவேன், சொல்ல மாட்டேன் என்பது உங்களுக்கே தெரியும். நீங்கள் நம்மிடையே வாழ்க்கை எப்படி ஆரம்பமாகியது'' என்று நினைப்பீர்கள். ஆனால் நாம் இருவரும் ஒன்றாக இருந்தும் தனித்தனியாகவே பிரிந்து வாழ்கிறோம்'' என்றேன்.

என் கணவர் சிரித்துக் கொண்டே ''வாழ்க்கையில் முன்னேறுவதுதான் இல்லற தர்மம்'' என்றார்.

''பணம் காசினால் தான் முன்னேற வேண்டும் ஆனால் அதைத் தவிர முன்னேற வேறு வழி கிடையாதா?''

அவர் கம்பீர பாவத்துடன் 'வேறு பெண்கள் பலவிதமாகக் கஷ்டப்படுகிறார்கள்— கணவன் சம்பாதிக்காததினாலும், அவர்களைச் சரிவர போஷிக்காததினாலும் ஆனால் உனக்கு ஒருவிதக் குறைவுமின்றி இருந்தும் நீ ஏன் பிறர் துன்பங்களை உன்மேல் இழுத்துப் போட்டுக்கொள்ளுகிறாய்?'' என்றார்.

அச்சமயம் என் குருட்டுக் கண்களில் ஒரு ஜோதியை உற்பத்தி செய்து. அந்த வாழ்க்கையின் முன்னேற்றத்திலிருந்து எங்கோ இழுத்துச் செல்வதுபோல் தோன்றியது. மேலும் வேறு பெண்களுடைய செயல்களைத் தெரிந்துகொள்வதுபோல் என் மனதில் உள்ளதைத் தெரிந்து கொள்ள அவரால் முடியாது.

எங்கள் சர்பாஷிணை நடக்கும் சமயம் ஊரிலிருந்து எல் அத்தை மாமி வந்தாள். நாங்கள் இருவரும் அவளுக்கு நமஸ்காரம் செய்ய எண்ணி எழுந்து நின்றோம்: அதற்குள் ''அடி அம்மா, நீ தான் விதி வசத்தால் குருடியாகிவிட்டாய் இப்பொழுது என் ஹரீஷ் எப்படி உன்னை வைத்துக்கொண்டு குடித்தனம் நடத்துவான்? அவனுக்கு வேறு கலியாணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்றாள் மாமி.

''நீங்கள் ஏதாவது ஒரு நல்ல பெண்ணைப் பார்த்துக் கலியாணத்தை முடித்துவிடுங்கள்'' என்று என் கணவர் சிரித்துக் கொண்டு சொல்லியிருந்தால் நன்றாயிருக்கும். ஆனால் அவர் அதற்கு நேர்மாறாக கோபக் குரலில் ''நீ ஏன் இம்மாதிரியெல்லாம் சொல்கிறாய்?'' என்று கேட்டார்.

''அடே யப்பா! நான் என்ன அப்படித் தப்பாகச் சொல்லிவிட்டேன்?—ஏன் அம்மா நீ தான் சொல்லேன்?'' என்றாள் மாமி.

'அத்தை, நீயும் நல்ல யோசனை தான் சொன்னாய். ஆனால் ஒருவர் மனம் புண்ணாகியிருக்கும் சமயம் அவருடைய சம்மதத்தைக் கேட்கலாமா?'' என்றேன் நான்.

''ஆமாம் அம்மா, சரியாகத் தான் சொன்னாய், நீயே கொஞ்சம் யோசித்துப் பார்—ஹரீஷ் இப்பொழுது எப்படி இருக்கிறான்? ஆனால் உன்னிடத்தில் ஒரு வார்த்தை சொல்லுகிறேன். குடும்ப ஸ்திரீகள் எவ்வளவு அடக்க ஒடுக்கமாகயிருக்கிறார்களோ, அதற்கேற்ற விதமாய் அவர்களது கணவர் பெயரும் கீர்த்தியும் அதிகரிக்கும். எங்கள் ஹரீஷ் டாக்டர் பரீக்ஷைக்குப் படிக்காமல் கலியாணம் செய்து கொண்டிருந்தால், அவனுக்கும் குடும்ப விவகாரம் கட்டாயம் தெரிந்திருக்கும்! வியாதியஸ்தன் டாக்டர் கையில் அகப்பட்டுக் கொண்டால் அவன் கதி அதோ கதிதான்!—அவன் இறந்து போய் விட்டால் அவர்களுக்குப் பீஸ் கிடைக்காமல் போய்விடும். ஆனால் குடும்பப் பெண்கள் இருந்தாலும் கணவனுடைய நன்மையையே தேடுவார்கள்''

வி. எஸ். வெங்கடேசன் மொழிபெயர்ப்பு

இரண்டு மூன்று நாட்களுக்குப்பிறகு என் எதிரிலேயே கணவர், அத்தையிடம் ''உங்கள் மருமகளுக்கு ஒத்தாசையாயிருக்க யாராவது பெரிய இடத்துப் பெண் ஒருவளைப் பார்த்து ஏற்பாடு செய்கிறீர்களா?'' என்று கேட்டார்.

அவருக்குப் பணிவிடை செய்ய என்னால் முடியவில்லை. யாராவது ஒரு பெண் அவருடைய வேலைகளைச் செய்யக் கிட்டிவிட்டால் நான் கவலையற்று இருந்து விடுவேன். நான் என் கண்களை இழந்த சமயம் இம்மாதிரி பேச்சு நடந்திருந்தால் அப்பொழுது வேறு விதமாக மாறியிருக்கும். ஆனால் என் கண்கள் பார்வையிழந்த பிறகு வீட்டு விவகாரங்கள் எப்படி நடக்கிறது என்பதே என் புத்திக்கு எட்டவில்லை! நான் அச்சமயம் எவ்வித வாதமும் செய்யவில்லை. மௌனமாயிருந்தேன்.

''பெண்களுக்கா பஞ்சம்? என் மைத்துனனுக்கே ஒரு பெண்ணிருக்கிறாள். அவளைப் பார்ப்பதற்குச் சாக்ஷாத் லக்ஷ்மி போலிருப்பாள். புஷ்பவதியுமாகி விட்டாள். ஏதாவது நல்ல வரன் வந்தால் அவளைக் கலியாணம் செய்து கொடுத்து விடுவது என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். உன்னைப் போல நல்ல குலத்தில் பிறந்தவர்கள் கிடைத்தால் உடனே முடித்து விடலாம்!'' என்றாள் மாமி.

என் கணவர் திடுக்கிட்டு ''கலியாண சம்பந்தமாக யார் பேச்செடுத்தது?'' என்று கேட்டார்.

''கலியாணம் செய்துகொள்ளாமல் ஒரு பெரிய இடத்துப் பெண் இங்கு வந்திருப்பாளா?''

கேள்விசரியானதுதான்: ஆனால் என் கணவர் அதற்குப் பதிலே கொடுக்கவில்லை. தனிமையாக நான் என் குருட்டுக் கண்ணைக் கொண்டு இருண்ட ஆகாயத்தைப் பார்த்து ''ஏ பரமேஸ்வரா, என் கணவரை நீ தான் காப்பாற்ற வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டேன்.

சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் நான் பூஜையை முடித்துக் கொண்டு வெளியே வந்ததும், மாமி என்னருகில் வந்து 'நான் அன்று என் மைத்துனன் பெண்ணைப் பற்றிச் சொன்னேனே அந்த ஹேமாங்கினி இங்கு வந்திருக்கிறாள்—ஹீமு (ஹேமாங்கினியின் செல்லப் பெயர்) இவள் உன் சகோதரி, நமஸ்காரம் செய்'' என்றாள்.

அப்பொழுது என் கணவர் அங்கே வந்தார். அதிவசீகரமுள்ள மங்கையின் அழகைக் கண்டு மௌனமாகத் திரும்பிச் செல்லலானார். அதற்குள் மாமி ''ஹரீஷ். எங்கே போகிறாய்?'' என்று கேட்டாள்.

''இந்தப் பெண் யார்?'' என்று என் கணவர் கேட்டார்.

''இவள்தான் என் மைத்துனன் பெண் ஹேமாங்கினி''

''எப்பொழுது வந்தாள்? யார் கூப்பிட்டுக் கொண்டு வந்தது? எதற்காக வந்தாள்?''—மேலும் இதேபோல் வெட்டிக் கேள்விகளை அலட்சியமாக அடுக்கிக் கொண்டே போனார் என் கணவர்.

'என்னென்ன நடக்கிறதோ அவைகளை யெல்லாம் நான் நன்றாகவே தெரிந்து கொள்ளுகிறேன்.' என்று என் மனதினுள்ளேயே சொல்லிக் கொண்டேன் அதன் பிறகு மறைத்து பேசுவது, பேச்சை மறைப்பது, பொய் சொல்வது-கபட நாடகம் ஆரம்பமாகியது. ''உங்கள் இச்சைக்காகக் கடமையினின்றும் வழுவி நடந்தாலும் நடவுங்கள். ஆனால் என்னிடத்தில் ஏன் இம்மாதிரி கபட வேஷப் போட்டு அதை மறைக்கிறீர்? என்னை ஏமாற்றுவதற்காக அந்தக் கபட நாடகத்தை ஏன் நடத்துகிறீர்கள்?' என்று எண்ணிக் கொண்டேன்.

நான் ஹேமாங்கினியின் கையைப் பிடித்து என் படுக்கை அறைக்கு அழைத்துச்சென்றேன். அவளுடைய முகம் சரீரம் முதலியவைகளைத் தடவிப்பார்த்தேன். நல்ல அழகும் சுமார் பதினைந்து வயதுடையவளாகவுமிருப்பாள் என்று தோன்றியது.

அவள் கட கட வென்று சிரித்துக் கொண்டு ''ஹோய்! என்ன செய்கிறாய்! எனக்குப் பிசாசா ஓட்டுகிறாய்?'' என்று கேட்டாள்.

அந்தச் சிரிப்பின் ஒலியினால் என் மனதில் பதிந்திருந்த மாறுதல் கணநேரத்திற்குள் விலகிற்று. நான் என் இடது கையை அவள் கழுத்தில் போட்டுக் கொண்டு ''உன்னைப் பார்க்கிறேன்!' என்று சொல்லி அவளுடைய அழகிய முகத்தைத் திரும்பவும் ஒருமுறை தடவிக் கொடுத்தேன்.

''பார்க்கிறாயா?'' என்று சொல்லி அவள் மற்றும் ஒரு முறை கட கடவென்று சிரித்தாள். பிறகு கொஞ்சம் சிரிப்பை அடக்கிக் கொண்டு ''நான் உன் வீட்டுத் தோட்டத்துக் கத்திரிக்காயா வெண்டைக்காயா, தடவிப் பார்த்து எவ்வளவு பெரியதாயிருக்கிறது என்று தெரிந்து கொள்ள?'' என்றாள்.

நான் 'குருடி' என்பது ஹேமாங்கினிக்குத் தெரியவில்லை என்று ஊகித்துக் கொண்டேன்.

''அம்மா, நான் குருடி!'' என்றேன் நான்.

அந்தக் கேட்டதும் அவள் ஆச்சரியமடைந்து போனாள். அவள் தன் கம்பீரமான பார்வையினால் என்னைப் பார்க்கிறாள் என்று எனக்குத் தெரிந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு ''ஓஹோ! அதனால் தானா சித்தியை இங்கே வரவழைத்தாய்?'' என்று கேட்டாள் ஹேமாங்கினி.

''நான் கூப்பிட்டனுப்பவில்லை. அவரே தான இங்கே வந்தார்''

ஹேமாங்கினி சிரித்துக் கொண்டே ''என்ன? அவளே இங்கு வந்தாளா? அப்படியானால் இங்கிருந்து இப்பொழுதுக்குக் கிளம்பமாட்டாள். ஆனால் என்னை ஏன் என் அப்பா இங்கே அனுப்பினார்?'' என்று கேட்டாள்.

அதே சமயம் மாமி உள்ளே வந்தாள். அது வரை அவள் என் கணவருடன் பேசிக்கொண்டிருந்தாள்.

''சித்தி, நீ எப்பொழுது ஊருக்குப் புறப்படப் போகிறாய்?'' என்று மாமியிடம் ஹேமாங்கினி கேட்டாள்.

''அடிப் பெண்ணே! இப்பொழுதுதான் வந்திருக்கிறாய். இதற்குள் வீட்டுப் பைத்தியம் பிடித்து விட்டதே? உன்னைப்போல் சஞ்சல புத்தியுடைய பெண்ணைப் பார்த்ததே கிடையாது'' என்றாள் மாமி.

''நீ இந்த இடத்தை விட்டு இப்பொழுதுகிளம்புவாய் என்று எனக்குத் தோன்றவில்லை. மேலும் இதுவும் உன் வீடு. நீ இங்கே எவ்வளவு நாள் இருக்கப் பிரியப்படுகிறாயோ அது வரை இருக்கலாம்; ஆனால் நான் இங்கிருந்து சீக்கிரமாகப் போக வேண்டும்'' என்று சொல்லி அவள் என் கையைப் பிடித்துக் கொண்டு ''நான் சொல்லுவது சரி தானே அக்கா? நீங்கள் எனக்கு ஏதாவது பந்துவாக இருந்தாலும் போகட்டும் என்று சொல்லலாம்'' என்றாள்.

ஹேமாங்கினியின் இந்தக் கேள்விக்கு நான் எவ்வித பதிலும் கொடுக்கவில்லை. சட்டென்று அவளை என் மார்புடன் அணைத்துக்கொண்டேன். மாமி எவ்வளவுதான் திறமை படைத்தவளாயிருந்தாலும், இந்தப் பெண்ணை வைத்து ஆதரிக்க அவளால் முடியாது' என்று தெரிந்துகொண்டேன். மாமி கோபத்துடன் ஹேமாங்கினியை ஏதோ சொல்ல எண்ணினாள். ஆனால் ஹேமாங்கினி என்னைத் தழுவிக்கொண்டு எனனிடையே மறைந்துவிட்டாள். மாமி அவளை அப்படியே தூக்கி விசிறி எறிந்து விட எண்ணினாள். எதனாலோ சிரித்துக்கொண்டே வெளியே போய்விட்டாள். ஆனால் சிறிது நேரத்தில் திரும்பி வந்து ''ஹேமா, வா குளிக்கப்போகலாம். நேரமாகிவிட்டது'' என்றாள்.

ஹேமாங்கினி என் அருகில் வந்து ''நாங்கள் இருவரும் நதிக் கரைக்கு ஸ்நானம் செய்யப் போகிறோம். சரிதானே?'' என்றாள்.

அவள் சொன்னது மாமிக்கு பிடிக்காதிருந்தாலும், அச்சமயம் மௌனமாகவே இருந்தாள். பேச்சை வளர்த்தால் கடைசியாக ஹேமாங்கினி தான் வெற்றி பெறுவாள், வாய்ச் சண்டை முற்றி என் எதிரில் ரஸாபாசமாகும் என்று மாமி எண்ணினாள் போலிருக்கிறது.

கதவருகில் போய்க்கொண்டே ''உங்களுக்கு ஏதாவது குழந்தை கிழந்தை யில்லையா?'' என்று என்னை கேட்டாள் ஹேமாங்கினி.

''ஏன குழந்தை பிறக்கவில்லை என்பது எனக்கு எப்படித் தெரியும? பகவான் அருள்புரியவில்லை'' என்றேன் நான்.

''உண்மையாகவே அது உன் பாபம் தான்!''

''அதுவும் ஈஸ்வரனுக்குத்தான் தெரியும்!''

ஹேமாங்கினி மாமியைச் சுட்டிக் காண்பித்து ''பாரேன்—என் சித்தியிடம் கெட்ட பழக்கங்களுக்கு மாத்திரம் குறைவே கிடையாது. அதனால்தான் அவளுக்குப் பிள்ளையே பிறக்கவில்லை'' என்றாள்.

பாப புண்ணியம், சுகதுக்கம், நன்மை தீமை இவைகளைப் பற்றி எனக்கே ஒன்றும் தெரியாது: அதனால் ஹேமாங்கினியிடம் எதுவும் வாதாடவில்லை. நான் ஒரு நீண்ட பெருமூச்சை வெளிக் கிளப்பி என் மனதினுள்ளேயே 'கடவுளே உனக்குத்தான் இவைகளெல்லாம் தெரியும்!' என்று சொல்லிக் கொண்டேன். ஹேமாங்கினி சட்டென்று என்னைப் பிடித்து அசைத்து ''என் பேச்சைக் கேட்டு பெரு மூச்சு தானா விடுகிறாய்? நான் சொல்வதில் கவனம் செலுத்துகிறாயா இல்லையா?'' என்று கேட்டாள்.

(தொடரும்)

	ரூ.	அ.
கருணையம்	1	0
சாந்தகுமாரி	1	0
மாய ப்ரபஞ்சம்	1	0
சந்திரமண்டலம்	1	0
புத்தியே புதையல	0	14
கதம்பமாலை	0	12
பட்டமோ பட்டம்	0	10
மகிழ்ச்சி உதயம்	0	10
ஆனந்தஸாகர்	0	8
வீரவஸந்தா	0	8
நளினசேகரன்	0	8
மூன்று வைரங்கள்	0	8
வத்ஸகுமார்	0	8
படகோட்டி	0	8
மாலதி	0	8

சுதேசமித்திரன்,
புத்தகசாலை, சென்னை.

விருத்தாசலம் ஸ்ரீ T. சம்மந்தம் பிள்ளை குமாரன் சிரஞ்சீவி சுப்பிரமணியனுக்கும், சிதம்பரம் தாலூகா லெக்ஷ்மிகுடி ஸ்ரீ சந்திர சேகரன் பிள்ளை குமாரத்தி சௌ.பார்வதவர்த்தினிக்கும் 1-6-42ல் சிதம்பரத்தில் நடந்த திருமணம்.

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின் டானிக்

நவ நாகரீகம்

★

ஒரு கரை

★

காசினி எழுதியது

***'**மா**லினி கட்டியிருந்த புடவையின் கரையை கவனித்தீர்களோ?' என்று எங்கள் பக்கத்தாத்துப் பங்கஜம் கேட்டாள்.

ஆம் என்று நான் தலையை அசைத்தேன். 'அதில் என்ன விசேஷம்?' என்று கமலினி கேட்டாள்.

"மாலினி புடவையின் கரை புதிய தினுசாகத்தான் இருந்தது. சுமாருக்கு ஒரு சாண் அகலம் இருந்தது. இதில் ஆங்கில வீ என்ற அக்ஷரம் போல் நெடுக விரல் அகலம் கறுப்புப் பட்டில் போட்டிருந்தது. பட்டியின் இரண்டு பக்கமும் இரண்டு மெல்லிய, ஆனால் எடுப்பான சரிகைக் கோடுகள் போட்டிருந்தது. இது இந்த வீ களை எடுத்துக் காட்டியிற்று. வீகளின் நடுவில் உள்ள மேல் பக்கத்து இடங்களில் சரிகையில் சிறிய, சிறிய தாமரைப் பூக்கள் மாதிரியில் போட்டிருந்தது. கீழ் பக்கம் தாமரை மொக்குகள் மாதிரியில் வேலை செய்திருந்தது, கரை நாசூக்காக, அழகாக இருந்தது. வீ என்ற எழுத்துக்கு ஜயம் என்ற பொருள். மாலினி தன் புடவைக்கு 'ஜெய-சேலை' என்று தான் பெயர் வைத்திருப்பதாகச் சொன்னாள். பொருத்தமான பெயர் என்று தான் சொல்ல வேண்டும்; சேலை அவ்வளவு நாசூக்காக இருந்தது.

ஒரு தைலம்

'**அ**த்தை—!' என்று கூப்பிட்டு விட்டு கமலினி நிறுத்திக் கொண்டாள்.

'என்ன வந்துடுத்து அத்தைக்கு?' என்று மாலினி வெடுக்கென்று கேட்டாள்.

'ஒன்று மில்லை; முந்தி ஒரு தரம் ஏதோ ஒரு பழத்தை எண்ணையில் ஊற வைத்து தடவிக் கொண்டால் நரை மயிருக்கு நல்லது என்று சொன்னார். அது தான் பெயர் மறந்து போச்சுது!' என்றாள் கமலினி.

'உனக்கு மயிர் நரைக்க ஆரம்பித்து விட்டதா?' என்று பங்கஜம் வியப்புடன் கேட்டாள்.

'வயசு கிட்டத்தட்ட முப்பது ஆகப் போகிறதே! கலியுகமோ இல்லையோ? நரைக்க வேண்டியது தானே?' என்று கமலினி வேதாந்தம் பேசினாள்.

இதற்குள் என் அத்தையும் கை வேலையை முடித்து விட்டுக் கூடத்துக்கு வந்தாள். மாலினி ஏதோ பழ ரசத்தைத் தடவினால் மயிர் கறுக்கும் என்றீர்களாமே?' என்று கேட்டாள்.

அத்தை சிறிது நேரம் யோசித்தாள். அப்புறம், 'அதுவா; கறுப்புப் புல்லாந்திப் பழம். எண்ணையில் ஊற வைத்து, சூரியப் புடம் போட வேண்டும். இதுக்குத் தான் கேச ரஞ்சினி என்று கூடப் பேர் என்று நினைக்கிறேன். சரியாக நினைவு இல்லை. ஆனால் இந்தத் தைலம் கூந்தலை வளரச் செய்யும் பழம் பெரிய, பெரிய மணத்தக்காளி பழம் போல் இருக்கும்!' என்று சொன்னாள்.

இந்தப் பழங்களை நல்ல எண்ணை அல்லது தேங்காய் எண்ணையில் அப்படியே போட்டு விட வேண்டும், பிறகு வெயிலில் வைக்க வேண்டும், கூந்தல் செழித்துக் கறுத்து வளருமாம்.

ஒரு ஊறுகாய்

சிலருக்கு ஊறுகாயில் எண்ணைப் போட்டால் பிடிக்கிறது இல்லை இல்லையா? இதோ எண்ணையே போடாமல் கிடாரங்கா ஊறுகாய் செய்யும் தினுசு எழுதி இருக்கிறேன். வேண்டிய அளவு மிளகாய் வறல், கொஞ்சம் வெந்தியம் கடுகு பெருங்காயம், மஞ்சள் இவைகளை வரட்டாக வறுத்து, வேண்டிய உப்பையும் கொஞ்சம் பாணலியில் போட்டுப் புறட்டிக் கொள்ள வேண்டும். இவைகளை நன்றாக தூளாக்கிக் கொள்ள வேண்டும்.

கிடாரங்காயைக் கொஞ்ச நேரம் ஜலத்தில் ஊற வைத்து நன்றாக அலம்பி எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு, காயைச் சுருள் போட்டு, விதையை உதறித் துண்டுகளாக்கிக்கொள்ள வேண்டும். ஜாடியை நன்றாக அலம்பித் துடைத்து, முதலில் காறப்பொடியைத் தூவி, பிறகு காய்த் துண்டுகளைப் போட்டு, காரப் பொடி தூவி, மாறி மாறிப் போட்டு, நன்றாக மூடி வைக்க வேண்டும். கடைசியிலும் காரப் பொடியைப் போட்டு மூட வேண்டும். இரண்டு நாளுக்கு ஒரு தரம் அடி மேல் வரும்படிக் குலுக்கவேண்டும். இந்த ஊறுகாய் சில மாதங்கள் வரையில் கெட்டுப் போகாமல் இருப்பதுடன், நல்ல வாசனையாகவும் இருக்கும்.

தன் எழில்வாய்ந்த சருமத்தைக் காப்பாற்றும் வழியைச் சொல்கிருள்!

"என்னுடைய சருமத்தை மிருதுவாகவும், அழகாகவும் வைத்திருக்க லக்ஸ் டாய்லெட் சோப் ஏதுவாயிருக்கிறது என்பது தெரிந்து கொண்டேன்" என்று "ஏக்ராத்" பட்தில் நடித்து கீர்த்தி பெற்றுள்ள இந்த அழகிய நடிகை சொல்கிருள். லக்ஸ் டாய்லெட் சோப்பின் நுரையை என் சருமத்தில் மிருதுவாகத் தேய்க்கிறேன்: அந்த நுரைக்கிருக்கும் உயர்தர மகிமையினுல் சருமத்திலுள்ள அழுக்குகளைப் போக்கி, என் சருமத்தில் மாசு ஏற்படாதபடி சுத்தமாக்குகிறது.' பிறகு சுத்தமான குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்கிறேன். தினமும் அனுஷ்டிக்கும் இந்த சாதாரண முறை என் சருமத்தை சுத்தமாகவும், வசிகரமாகவும் செய்வதுடன் மிருதுவும், வாசனையும் அளித்து சருமத்தைப் புதிதாக்குகிறது.

லக்ஸ் டாய்லெட் சோப்

சினிமா நடிகளின் சுந்திர சோப்

LTS. 59-172 TM.   LEVER BROTHERS (INDIA) LIMITED

நோட்டீஸ்

கீழ்க்கண்ட இடங்களுக்கு விஜயம் செய்யும் எமது வைத்தியரை தினசரி காலை 8 மணி முதல் 10 மணி வரையும் பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரையும் கண்டு குழந்தைகளின் ஈரல், குலைக் கட்டி வியாதிகளுக்கு ஆலோசனை பெறலாம்.

தேவகோட்டை	—	20-6-42	ஸ்ரீ மீனுக்ஷி ஸ்டோர்ஸ்.
மதுரை	—	22 & 23-6-42	Mr. டி. என். வி. நாகலிங்கம் பிள்ளை வடக்கு சித்திரை வீதி.
தூத்துக்குடி	—	25 - 6 - 42	தூத்துக்குடி மெடிகல் ஸ்டோர்ஸ்.
ஸ்ரீவைகுண்டம்	—	26 - 6 - 42	Mr S. கோமதி நாயகம் பிள்ளை மெடிகல் ஹால்.
திருநெல்வேலி	—	27 - 6 - 42	"சந்திர விலாஸ்," திருநெல்வேலி ஜங்.
தென்காசி	—	28 - 6 - 42	மெடிகல் ஸ்டோர்ஸ்.
திருச்சினுப்பள்ளி	—	1, 2 - 7 - 42	"லிவர்க்யூர் பிராஞ்சு ஆபீஸ்", 17, தேரடிக் கடைத் தெரு, தெப்பக்குளம்.

சென்னை, கும்பகோணத்தில் ஆலோசனை நேரம் வழக்கம்போல். கடிதங்கள கீழ்க்கண்ட இடத்திற்கே எழுதப்படவேண்டும்:

ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்,

48, பெரிய தெரு, கும்பகோணம்.

சித்திரமும் சிருங்காரமும்

★

ஒரு நடிகையின் வாழ்க்கை — காதரைன் ஹெப்பர்ன். — ஹ்யூகோ நவீனம் — மீண்டும் படம் பிடிக்க ஏற்பாடு. — "ஸேத்" — ஷேக் முக்தாரின் குரங்கு.

"இவ்வருஷத்திய ஸ்திரீ"

மெட்ரோ-கோல்ட்வின் மேயர் கம்பெனியாரின் "வுமன் அப் தி இயர்" (இவ்வருஷத்திய ஸ்திரீ) என்ற ஆங்கில படத்தில் அகாடமி கௌரவத்தைச் சம்பாதித்த மூன்று பிரபல நடிகர்கள் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றனர் ஸ்பென்ஸர் ட்ரெஸியும் காதரைன் ஹெப்பர்னும் நடிக்கும் இந்தப் படம் அதி ஸ்வாரஸ்யமானது. இவ்விருவருக்கும் மிகப் பொருத்தமான கதா பாத்திரமும் கிடைத்திருக்கிறது. ஒரு பத்திரிகைக்குக் கட்டுரைகள் எழுதும் ஒரு நிருபராக காதரைன் ஹெப்புர்ன் இதில் நடிக்கிறார். இந்தப் படத்தைப் பிடிக்க மெட்ரோ அதிகாரிகள் முன் வந்ததற்கு காதரைன் இந்தப் படக் கதையில் காட்டிய மோகம்தான் காரணம்.

"இந்தக்கதை எனக்கு ரொம்பவும் திருப்தி தரும். எனக்கு ஆரம்பத்திலேயே தெரியும். ஸாம் என்பவரை நடிக்கஸ்பென்ஸர் ட்ரேஸி ஒப்புக்கொண்டது எனக்கு உண்மையான உத்சாகத்தைக் கொடுத்தது. பலவருஷங்களாகவே ட்ரோஸிஹடர் சேர்ந்து ஒரு படத்தில் நடக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டு. இதற்குக் காரணம் அவரது நடிப்பை நான் சதா பாராட்டிவந்திருப்பதுதான். எங்கள் இருவருக்கும் நடிப்பு முறை வித்தியாசப்பட்டிருந்ததாயினும், இந்தப் படத்தில் இருவரும் மனமொத்து நடிக்க முடியும் என நான் கண்டுகொண்டேன். ஒரு பத்திரிகைக்காரராக நடிப்பதற்கு ஸ்பென்ஸர் ட்ரேஸிதான் அதிக லாயக்குள்ளவர்; என்பதும் எனக்கு நன்கு தெரியும், இதற்கான மனப்பான்மை அவரிடம் அமைந்திருக்கிறது" என்றார் காதரைன் இந்த படத்தைப் பற்றி.

ஸ்பென்ஸர்ட்ரேஸி அகாடமி கௌரவத்தை இருமுறை சம்பாதித்தவர், 1937-ல் முதல் விசை இவருக்கு இந்த சின்னம் கிடைத்தது. "காப்டன் கரேஜியஸ்" என்ற படத்தில் இவர் காட்டிய நடிப்புக்காக முதல் விசையும், "பாய்ஸ் டவுன்" என்ற படத்தில் சிறப்புடன் நடித்ததற்காக இரண்டாம் விசையும் அகாடமியார் இவரைக் கௌரவித்தனர்.

1933-ல் "மார்னிங் க்ளோரி" என்ற படத்தில் காதரைன் ஹெப்பர்ன் நடித்ததைப் பாராட்டி, இவருக்கு அவ்வருஷம் அகாடமி கோப்பை வழங்கப் பட்டது. "வுமன் அப்தி இயர்" என்ற படத்தில் நடிக்கும் பெயிண்டருக்கும் 1938-ல் "ஜெஸபெல்" என்ற படத்தில் நிரூபித்த நடிப்பு திறமைக்காக இதே கௌரவம் கிடைத்தது.

"பிலடெல்பியா ஸ்டோரி" என்ற படத்திற்கப்புறம் இந்தப் படத்தில்தான் காதரைன் ஹெப்பர்ன் நடிக்கிறார். முந்திய படம் காட்டப்பட்ட இடங்களிலெல்லாம் மதிப்பு சம்பாதித்தது.

இந்த புது படத்தில் இவர் நடிக்கும் வேஷம் இவருக்குப்பல விதத்திலும் ஏற்றதேயாகும். காதரைன் ஹெர்ப்பான் கனக்டிகட்டில் இருந்த ஒரு பிரபல டாக்டரின் புத்திரி: பிறந்த குடும்பம் மிகப் பெரிது, இவர் சிறு பெண்ணுகை விருந்த காலம் முதற்கொண்டே இக்குடும்பத்தாருக்கும் பல பிரபலஸ்தர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. இவரது தாயார் சமூக முன்னேற்றத்தில் அதிக சிரத்தை கொண்டவர்: இப்போது பெண்ணும் அன்னையைப் போலவே அதே விஷயத்தில் ஆசையுடன் இருந்து வருகிறார்: காதரைன் பல கமிட்டிகளில் ஸ்தானம் வகித்து வருகிறார்.

காதரைனும் அவரது உடன்பிறந்தோரும் அடிக்கடி வெளியூர்களுக்கு அவர்களது தாய் தந்தையாரால் அழைத்துக் கொண்டு போகப் படுவது வழக்கம். நாடக மேடையில் தனக்குள்ள பற்றுதலை இளமையிலேயே காதரைன் காட்டி விட்டார்: ஆகவே இவரது தகப்பனுர் தமது மாளிகையின் தோட்டத்தில் ஓர் புறமாக ஒரு பொம்மை அரங்கத்தை அமைத்துக் கொடுத்தார். இங்கு ஹெப்பர்ன் குடும்பத்தார் வேடிக்கையாக நடித்து பொழுது போக்கி வந்தனர்.

பிறகு ப்ரீன்மார் எனுமூருக்கு காதரைன் வந்து சேர்ந்து, தனது வித்யாப்யாசத்தை நடத்தினர். இங்கும் பள்ளிக்கூடத்தில் பிரதி வருஷமும் நாடகங்களில் நடித்து பிரக்யாதி பெற்றார், இவர் கலாசாலையிலிருந்து பட்டத்துடன் வெளிவந்த பின்பு எட்வின் நாப் என்பவரின் ஸ்டாக் கம்பெனியில் இவர் உத்தியோக மேற்றார்: ஆயினும் நாடகக் கலையில் இருந்த ருசி போகவில்லை.

"வாரிலர்ஸ் ஹஸ்பண்ட்" என்ற நாடகம்தான் இவரது நடிப்புத் திறமையை இதரர்களுக்குப் பிரகாசப்படுத்தியது. நியூயார்க் நாடக விமர்சகர்கள் யாவரும் இவரை ஏகோபித்துப் பாராட்டினர். இதற்கப்புறம் "டிவோர்ஸ்மெண்ட்" என்ற படத்தில் நடிக்க இவர் ஒப்புக்கொண்டார். இதற்கப்புறம் அநேக படங்களில் நடித்து, விஸ்தரித்த கீர்த்தியுடன் இவர் சோபிக்கிறார்.

எப்ஸ்டீன் சித்திரம்

"பைபிள்" என்ற கிறிஸ்தவர் வேத புத்தகத்தில் ஜாகோப் ஒரு தெய்வாம்சத்துடன் போராடுவதாகத்தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த படத்தில் இந்த சம்பவத்தை உலகில் மிகுந்த பிரசித்திபெற்ற ஜாகோப் எப்ஸ்டீன் சிற்பமாகச் செய்திருக்கிறார்.

இராக்காலங்களில் க்ளப்புகளுக்குப்போய் குடித்துக்கிடக்கும் வழக்கம் இவருக்குக்கிடையாது: பல பிரபலஸ்தர்கள் கூடும் பெரிய விருந்துகளுக்கும் போவதில்லை: தமது வேலையில் மும்முரமாக முனைந்திருப்பதே இவருக்குப் பரம திருப்தியானது. விளையாட்டுகளில் அதிகப்ரியம்கொண்டவர்: டென்னிஸ் ஆட்டத்தில் கொண்ட விருப்பம் அதிகம். நீந்துவது, கோல்ப், இவைகளிலும் இவருக்கு ப்ரீதி உண்டு.

* * * *

ஹ்யூகோ கதை

விக்டர் ஹ்யூகோ என்ற பிரபல பிரெஞ்சு நவீன கர்த்தர் எழுதிய "லே மிஸ்ரப்லே" என்ற கதையைப் படம்பிடிக்க 20-ம் செஞ்சுரி பாக்ஸ் கம்பெனியார் ஏற்பாடுசெய்திருக்கின்றனர். இது மிகவும் பிரசித்தமான கதை: படித்தவர் யாவரும் இன்பமடைந்த கதை. டாரில் ஸானுக் தயாரிக்கவிருக்கும் இந்தப்படத்தில் லேர்ட் க்ரேகர், துப்பறியும் ஜேவர்ட்டாகவும், லிண்டா டார்னெல் ஜின் வால் ஜினின் அபிமான புத்திரியாகவும் நடிப்பார்கள். நாடகத்திற்கேற்றபடி இக் கதையை டால்போட் ஜென்னிங்ஸ் அமைப்பார். இந்தக் கதை இதற்கு முன்பு இரு முறைகள் படம் பிடிக்கப்பட்டிருப்பதால் இதில் சற்று மாறுதல்கள் இருக்கக் கூடும். லேர்ட் க்ரேகருக்குப் பிராதான்யம் அளிக்க சில் இடங்களில் கதை திருத்தியமைக்கப் படலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

"ரோடி"

நேஷனல் ஸ்டூடியோ அதிகாரிகள் தயாரித்துவரும் "ரோடி" என்ற ஹிந்திப் படத்தில் நடிக்கும் ஷேக் முக்தார் தம்முடன் எப்போதும் ஒரு குரங்கை இணை பிரியாமல் வைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்று டைரக்டர் மெஹ்பூப் தெரிவித்தார். இதற்காக ஒரு குரங்கை வாங்கிவர ஒரு கோஷ்டி க்ராபோர்ட் மார்க்கெட்டுக்குக் கிளம்பியது. ஷேக் முக்தாரும் அப்போது போனார். மார்க்கெட்டுக்கு சென்றதும் முக்தாரின் பார்வை ஒரு குரங்கு மீது விழுந்தது. ஸேத் எனறழைக்கப்படும் அக்குரங்கின் பார்வையும் முக்தார் மீதே விழுந்தது. இந்தக் குரங்கு இப்போது முக்தாரை விட்டுப் பிரிவதில்லை: தனது எஜமானனின் நண்பர்களைத் தனது நண்பர்களாகவும், அவரது விரோதிகளைத் தனது விரோதிகளாகவும் அது பாவித்து வருகிறது. இந்தக் குரங்கு அத்ருஷ்டம் பண்ணியது என்று தான் கூற வேண்டும். காலையில் எழுந்தவுடன் இதை ஒரு வேலைக்காரன் குளிப்பாட்டுகிறான்: இதற்களிக்கப்படும் உணவோ சாமான்ய மனிதர் பார்த்து பொறாமைப் படத்தக்கது. யாராவது முக்தாரைப் பார்க்க வந்தால் இது அவரிடம் போய் அதைத் தெரிவிக்கும் விதம் அபூர்வமானது.

த்யாகராஜ கீர்த்தனம்

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்ம)
[காபிரை]

I

பல்லவி

ச்ருங்காரிம்சு கொனி வெடலிரி
ஸ்ரீ க்ருஷ்ணுனி தோனு

அனுபல்லவி

அங்க ரங்க வைபோக முதோ கோ-
பாங்க நாமனு லெந்தோ ஸொகஸுக

சரணம்

1. நவ்வுசு குலுகுசு ஒகதே கொப்புன
புவ்வுலு முடுசுசு ஒகதே
துவ்வுசு குருலனு ஒகதே க்ருஷ்ணுனி
ரவ்வஜேயுசு ஒகதே வேட்கக

2. மகடு வீடனுசு ஒகதே ரவிகெயு
பிகுவுன ஜேர்சுசு ஒகதே
தகுனு தன கனுசு ஒகதே பாத-
யுகமுல ஒத்துசு ஒகதே வேட்கக

3. ஸொக்குசு ஸோலுசு ஒகதே க்ருஷ்ணுனி
க்ரக்குன முத்திடு ஒகதே
பக்ககு ரம்மனு ஒகதே மடுபுல
நக்கரஒஸகுசு ஒகதே வேட்கக

4. பரிமளமு லந்துசு ஒகதே ஸ்ரீ ஹரி
ஹரியனுசுனு ஒகதே
யுரமுன ஜேர்சுசு ஒகதே பய்யெத
ஜரிபி வேடுகொனு ஒகதே வேட்கக

5. ஸார ஸாக்ஷயனு ஒகதே கனு-
ஸைகனு பிலுசுசு ஒகதே
ராரா யனு சுனு ஒகதே
த்யாக ராஜ ஸகுடனுசு ஒகதே வேட்கக

II

கோபாங்க நாமனுலு	—கோபிகா ஸ்திரீகள்
எந்தோ ஸொகஸுக	—எவ்வளவோ அலங்காரங்களுடன்
அங்கரங்கவைபோகமுதோ	—மிகுந்த விபவங்களுடன் கூடி சந்தோஷப் கொண்டவர்களாய்
ச்ருங்காரிம்சுகொனி	—ஆடை ஆபரணங்களால் தங்களை நான்கு அலங் கரித்துக் கொண்டு
ஸ்ரீ க்ருஷ்ணுனிதோனு	—ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவுடன்
வெடலிரி	—புறப்பட்டார்கள்
ஒகதே	—ஒரு கோப கன்னிகையானவள்
நவ்வுசு குலுகுசு	—சிரித்துக் கொண்டும் உடம்பை குலுக்கிக் கொண் [டும்
ஒகதே	—வேறொருவள்
கொப்புன புவ்வுலமுடுசுனு	—கொண்டையில் பூவை சூட்டிக்கொண்டும்
ஒகதே	—மற்றொருவள்
துவ்வுசு குருலனு	—நன்றாக தலையை வாரி முடிந்து கொண்டும்
ஒகதே	—மற்றொருவள்
வெட்கக	—வேடிக்கையாக
ஸ்ரீக்ருஷ்ணுனி	—ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவை
ரவ்வஜேயுசுனு	—பரிகாசம் செய்து கொண்டும்
ஸ்ரீக்ருஷ்ணுனி தோனு	—ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவுடன்
வெடலிரி	—யமுனா தீரத்திற்கு புறப்பட்டார்கள்
ஒகதே	—மற்றொருவள்
மகடு வீடுஅனுசு	—ஸ்ரீ க்ருஷ்ணனே தனக்குப் பதியென்ற பாவத் [துடனும்
ஒகதே	—மற்றொருவள்
ரவிகெயுபிகுவுன ஜேர்சுசு	—ரவிக்கை முதலான உடைகளை இறுக்கி கட்டிக [கொண்டும்
ஒகதே	—மற்றொருவள்
தகுனு தனகு அனுசு	—க்ருஷ்ணனுடன் உல்லாசமாக பொழுது போக்கும் பாக்யம் தனக்கு கிடைக்கத் தகுதியானது என்று சொல்லிக்கொண்டும்
ஒகதே	—மற்றொருவள்
பாதயுகமுலன்	—ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திருவடிகளை
ஒத்துசு	—பிடித்துக்கொண்டும்
வேட்கக	—வேடிக்கையாக (ச்ரிங்காரிஞ்சு)
ஒகதே	—மற்றொருவள்
ஸொக்குசு ஸோலுசு	—க்ருஷ்ண ஸ்வரூபத்தில் மயங்கி தள்ளாடி நடந்து [கொண்டும்
ஒகதே	—மற்றொருவள்
க்ருஷ்ணுனி க்ரக்குனமுத்திடு	—ஸ்ரீ க்ருஷ்ணனை அடிக்கடி முத்தமிட்டுக் [கொண்டும்
ஒகதே	—மற்றொருவள்
பக்ககுரம்மனுசு	—ஸ்ரீ க்ருஷ்ணனை தன் சமீபம் வா என்று அழைத [துக்கொண்டும்
ஒகதே	—மற்றொருவள்
மடுபுலன் அக்கரன் ஒஸகுசு	—மிகுந்த அக்கரையுடன் வெற்றிலையை ஸ்ரீ க்ருஷ்ணனுக்கு மடித்துக்கொடுத்துக் கொண்டும்
வேட்கக	—வேடிக்கையாக
ஸ்ரீக்ருஷ்ணுனிதோனு	—ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவுடன்
வெடலிரி	—யமுனா தீரத்திற்கு புறப்பட்டார்கள்
ஒகதே	—மற்றொருவள்
பரிமளமுலு அந்துசுனு	—வாசனைத் திரவியங்களை ஸ்ரீ க்ருஷ்ணனுக்கு [சமர்ப்பித்துக்கொண்டும்
ஒகதே	—மற்றொருவள்
ஹரிஹரியனுசுனு	—பக்தி பரவசத்தால் ஹரி ஹரி என்று பகவந் நாமாவளிகளை சொல்லிக்கொண்டும்

நீதிக் கதை

'உத்தவா அப்பு'

★

எ. எஸ். பி. அய்யர்.
ஐ. ஸி. எஸ்.

முத்து என்னும் பள்ளிக்கூட உபாத்தியாயர் தன் வீட்டின் கூடத்தில் உட்கார்ந்து கொண்டு ஏதோ படிப்பது போல் புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டிருந்தார். அவருடைய பார்வையோ, படுக்கை அறையின் கதவின் மீதே இருந்தது. ஒரு மருத்துவச்சி திடீரென்று படுக்கை அறையின் கதவண்டை தோன்றினாள். "உடனே வைத்தியரைக் கூப்பிடுங்கள், ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது, ஆனால் அந்தக் குழந்தை அழவேயில்லை. என்னால் செய்யக்கூடிய பிரதம சிகிச்சையை நான் செய்து கொண்டிருக்கிறேன். நீங்கள் தாமதம் செய்யாமல் வைத்தியரை அழைத்து வாருங்கள்' என்று மருத்துவச்சி சொன்னாள். முத்து அறைக்குள் சென்றார். படுக்கையின் மீது படுத்திருந்த தன்னுடைய மனைவியின் முகத்தையும், தனது முதல் குழந்தையையும் பார்த்தார். மனைவியின் முகம் வெள்ளை வெளேலென்று வெளுத்துக் கிடந்தது. குழந்தை எலும்பும் தோலுமாகப் படுக்கையில் கிடந்தது. உடனே தன்னுடைய துவிச்சக்கர வண்டி (பைஸிக்கிள்) யின் மீது ஏறிக்கொண்டு முத்து அருகிலிருந்த கோவிந்தன் என்னும் வைத்தியனுடைய வீட்டிற்குச் சென்றார்.

பத்து நிமிஷங்களுக்குள் வைத்தியர் முத்துவின் வீட்டிற்கு வந்தார். 'குழந்தைக்கு உடம்பு எப்படியிருக்கிறது?' என்று வைத்தியர் மருத்துவச்சியைக் கேட்டார். 'இப்போது கொஞ்சம் சுமாராகிக்கொண்டு வருகிறது. ஆனால் பிராணன் வருவதற்கு அதிக கஷ்டமாகப் போய் விட்டது' என்று மருத்துவச்சி பதிலளித்தாள். கோவிந்தன் என்னும் வைத்தியர், அரை மணி நேரம் ஏதோ சிகிச்சை செய்தார். குழந்தை வீறிட்டு அழத் தொடங்கிற்று. அந்த அழுகையைக் கேட்டதும் முத்துவின் முகத்திலும், அவனுடைய மனைவியின் முகத்திலும் புன்சிரிப்புத் தோன்றிற்று. மேற்கூறியபடி ஒன்றுக்குமுதவாத அப்பு இவ்வுலகத்தில் தோன்றினான்.

அப்பு பள்ளிக்கூடம் செல்லல்

அப்பு தன் தகப்பனுருடைய பள்ளிக்கூடத்திலேயே சேர்ந்து படிக்கத் தொடங்கினான். அவன் தன் பாடங்களைத் தவிற மற்றெல்லா விஷயங்களையும் கற்று வந்தான், அவன் மாமரம் கொத்துவதில் சமர்த்தனானன். மாங்காய்களைத் தின்னும் வழக்கம் அவனுக்குப் பிடிபட்டது. உபாத்தியாயருடைய

(அடுத்த பக்கம் பார்க்க)

ஒகதே	—மற்றொருவள்
யுரமுன ஜேர்சுசு	—ஸ்ரீ க்ருஷ்ணனை மார்போடு மார்பு கட்டி அணைத் [துக்கொண்டும்
ஒகதே	—மற்றொருவள்
பய்யெத ஜரிபிவேடுகொனு	—தன்மேல் ஆடையை எடுத்து சரி செய்து கொண்டு தன்னை ஏற்றருளுமாறு ஸ்ரீ க்ருஷ்ணனை வேண்டிக்கொண்டும்
வேட்கக	—வேடிக்கையாக
ஸ்ரீ க்ருஷ்ணுனி தோனு	—ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவுடன்
வெடலிரி	—யமுனா தீரத்திற்கு புறப்பட்டார்கள்
ஒகதே	—மற்றொருவள்
ஸாரஸக்ஷயனுசுனு	—தாமரைக் கண்ணா! என்று பகவானைக் கூவி [அழைத்துக்கொண்டும்
ஒகதே	—மற்றொருவள்
கனுஸைகனு பிலுசுசு	—கண் ஜாடையால் க்ருஷ்ணனை தன் சமீபத்திற்கு வா என்று அழைத்துக்கொண்டும்
ஒகதே	—மற்றொருவள்
ராராயனுசுனு	—தன் சமீபம் வரும்படி க்ருஷ்ணனை கூவி அழைத் [துக்கொண்டும்
ஒகதே	—மற்றொருவள்
த்யாகராஜ ஸகுடுஅனுசு	—த்யாகராஜன் என்று பெயர் கொண்டுள்ள பரமசிவன் நண்பனே என பகவானை துதித்துக் [கொண்டும்
வேட்கக	—வேடிக்கையாக
ஸ்ரீ க்ருஷ்ணுனி தோனு	—ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவுடன்
வெடலிரி	—யமுனா தீரத்திற்கு புறப்பட்டார்கள்

III

கிருஷ்ண பரமாத்மாவினால் நடிக்கப்பட்டுள்ள சில ரகஸ்ய லீலா விநோதங்களை பக்தர்களான ஜயதேவ கவியும், த்யாகராஜ ஸ்வாமிகளும் கான ரூபமாகக் கூறியுள்ளார் என சிலர் கருதது. ஜயதேவ கவி நந்தகோபன் சகோதரியான ராதை, கிருஷ்ணன் பால கொண்டுள்ள பக்தியையும் கிருஷ்ணன் அவளுக்கு அருள் புரிந்ததையும் அஷ்டபதி கிரந்தம் மூலம் விளக்கியுள்ளார். பக்தைகளான கோபிகா ஸ்திரீகளின் பக்தியை சோதித்து அவர்களுக்குப் பகவான் அருள் புரிந்த வரலாற்றை இச்சரிதத்தின் மூலம் ஸ்வாமிகள் நிரூபித்துள்ளார்.

இச் சங்கித நாடகத்திலுள்ள கீர்த்தனங்களுக்கு முன்னும் பின்னும் ஸீஸ பத்யங்களும், கந்த பத்யங்களும் காணப்படுகின்றன. அவைகளை எல்லாம் படித்துப் பார்த்தால் இந்தக் கதை நன்கு விளங்கும். அவைகளில் முக்யமாயுள்ளவைகள் கதைக் கோவைக்கு ஏற்றுப்போல் அங்கங்கே இவ் வாரப் பதிப்பிலும் வெளியிடப்படும்.

ச்ருங்காரிம்சு கோனி:—இந்தக் கீர்த்தனத்திற்கு முன்பு கூறப்பட்டுள்ள,

மூர ஹரு டானந்த முதோ-முரளினி கொனிஸகல ஜனுலு மோஹிம்பனு தா
ஸரிகம பத நிஸ யனுசுனு-கருணனு கரஜமுல சேத கானமு ஸலஸன்

என்ற கந்த பத்யத்தில் முராரியான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஒரு சமயம் மிகுந்த சந்தோஷத்துடன் விளங்கி தன் புல்லாங் குழலைக் கையிலெடுத்து சப்த ஸ்வரங்களின் சேர்க்கையால் உண்டாகும் திவ்ய கானத்தை தன்னுடைய விரல்களின் உதவியாலும் குழலூதும் திறமையாலும் அனைவரும் கேட்டு பரவசமடையச் செய்தார் என்று கூறப்பட்டுள்ளது. ஸ்ரீமத் பாகவதம் தசமஸ்கந்தம் 21-வது அத்யாயத்திலும் இவ் விவரம் காணலாகும்.

கண்ணன் குழலோசையைக் கேட்டு ஸகல ஜீவ கோடிகளும் மயங்கி நின்ற தன்மையை பெரியாழ்வார் அருளிச் செய்த முதலாயிரம் 3-ம் பத்து 6-வது திருமொழியில் உள்ள பாசுரங்களில் நன்கு காணலாகும். மேலும் ஸ்வாமிகள் அருளிச் செய்த,

வீனுல வேணுரவாம்ருத - பானம் புனு ஜேஸி சேஸி பலு விரஹ முசே
ஸ்ரீ நாதுனி வெதகுசு கஜ - யானலு மரி வீதி வீதி திரிகிரி மமதன்

என்ற கந்த பத்யத்தில் பகவானுடைய இவ்வித கர்ணாம்ருதமான வேணுகானத்தைக் கேட்டு பக்தைகளான கோபிகைகள் விரஹ தாபம் மேலிட்டவர்களாய் மதம் பிடித்த யானைகள் போன்று பகவானைக் காணத் தெருத் தெருவாய்த் தேடி அலைந்தனர் என்றும்,

ஸ்ரீரம்யம்பகு கோகுலம்புன ஜெலுல் - செல்வொந்த ச்ருங்காருலை
ஸாரா சாருனி ஜூட ஜூட மதிலோ - ஸந்தோஷமுல் மீரகா
ராரா கௌகி டிகம்சு வேடுசு மதின் - ராஜில்லு ஸ்ரீ கிருஷ்ணுதோ
நாரீ ரத்னமுலெல்ல கூடி சனிரா - னந்தாம புதிந் நீதுசுன்

அவ்விதம் பகவத் தரிசனத்துக்கு ஏங்கி நின்ற கோகுல வாசிகளான கோபிகைகளுக்கு மிகுந்த அலங்காரங்களுடன் விளங்கும் ஸ்ரீ கிருஷ்ணனைக் காணக்காண மனதில் சந்தோஷம் பாங்க, அவர்கள் தங்களை ஏற்று அருளுமாறு பகவானை மனதாரவேண்டிக்கொண்டு, சௌந்தர்யாதி விசேஷங்கள் நிறைந்த அந்த பரமாத்மாவுடன் சேர்ந்து விளங்கி பிரும்மானந்தத்தை அடைந்தனர் என்றும் தெரிவித்து இக்கீர்த்தனத்தால் பக்தைகளான கோபிகா ஸ்திரீகள் மிகுந்த அலங்காரங்களுடன் சந்தோஷமாக பகவானுடன் யமுனா தீரத்துக்குப் புறப்பட்டார் என்று ஸ்வாமிகள் இச்சரிதத்தை ஆரம்பிக்கிறார்.

அங்க ரங்க:—ஸ்வாமிகள் கண்ணன் குழல் ஓசையைக்கேட்டு ஸகல கோபிகா ஸ்திரீகளும் தங்களை ஆடையாபரணங்களால் நன்கு அலங்கரித்துக்கொண்டுக் கண்ணனைத்தேடி புறப்பட்டார்கள் என்று கூறியுள்ளார். ஆனால் பெரியாழ்வார், கண்ணன் வேணுகானம் கேட்டு கோபியர் செய்வகை மறந்து நின்றனர் என்று வர்ணித்துள்ளார்.

நவ்வுசு குலுகுசு:—இந்தக் கீர்த்தனத்தின் சரணங்களில் பக்தைகளான கோபிகைகள் கண்ணன் ஸமீபத்தை அடைந்து பக்தி பரவசத்தால் அவனுடன் செய்த லீலா விநோதங்களின் தன்மை விவரிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ ஜயதேவ ஸ்வாமிகள் அருளிச்செய்த கீத கோவிந்தத்தில் 4, 5, வது அஷ்டபதிகளிலும் இச்சந்தர்ப்ப விசேஷம் வர்ணிக்கப்பட்டுள்ளது.

IV

ராகம் ஸுரடி — ஆதி தாளம்

28-வது மேள ஜன்யம் ஆ. ஸரிமபநித நிஸ
அவ. ஸ்நிதப மக பமரீஸ.

பல்லவி

; ஸ்ா ஸ்ா ;	ஸ்நி நீ தா பா	பம் பா	நித பம	மக பம	ரீ ;
ச்ரிங் கா	ரிஞ் . சு கொ	னி . வெ	ட லி .	ரி . .	
; மரிம ரீ ஸ	ஸநிஸா ரீ மா	மக பம	ரீ ரிம	பநி. தநி	ஸ்நி தநி
ஸ்ரீ . . க்ருஷ் .	ணு . னி தோ .	னு் . . .	. ஸங் .	தோ . . .	ஷ . மு .

ஸ்ரி
க . (ச்ரிங்காரிஞ்சு)

(முன் பக்கத் தொடர்ச்சி)

மூக்குக் கண்ணுடியை ஒளித்து வைத்து விட்டு அவன் வேடிக்கை பார்ப்பது வழக்கம், எப்பொழுதும் உபாத்தியாயர்களையும் பள்ளித் தோழர்களையும் அவன் கேலி பண்ணிக் கொண்டே இருப்பான். ஒரு நாள் அவன் படித்து வந்த பள்ளிக் கூடத்திற்கு இன்ஸ்பெக்டர் சென்றார். அப்பு படித்து வந்த வகுப்பிலிருந்த பிள்ளைகளைப் பார்த்து அவர் பின் வருமாறு கேட்டார். 'இன்ஸ்பெக்டர் என்ன செய்கிறார்?' 'உபாத்தியாயர்கள் கஷ்டப்பட்டு எந்த விஷயம் இன்ஸ்பெக்டருக்குத் தெரியக்கூடாதென்று மறைத்து வைக்கிறார்களோ அந்த விஷயத்தைக் கண்டு பிடிக்க, அவர் சுற்றித் திரிகிறார்' என்று அப்பு பதிலளித்தான். அந்த விடையைக் கேட்டு இன்ஸ்பெக்டர் ஒருவாறு திருப்தியடைந்தாரென்றே சொல்லவேண்டும். தலைமை உபாத்தியாயருக்கோ கோபம் பொங்கிக்கொண்டிருந்தது. முத்துவோ பயந்து நடுங்கினான். அன்று இன்ஸ்பெக்டர் பிள்ளைகளுக்கு பரிசுகள் கொடுக்க வேண்டியிருந்தது. அவர் பரிசுகளை வழங்கினார். அப்போது இன்ஸ்பெக்டர் அந்த ஊர் சேர்மென் மிகவும் நல்லவரென்றும், பணக்காரரென்றும், ஆனால் இரண்டு சிறிய காலி சோப்புப் பெட்டிகளையே அவர் பரிசாக அளித்திருக்கிறாரென்றும் சொன்னார். 'நமது சேர்மென் தங்கமான மனதுடையவர்' என்று இன்ஸ்பெக்டர் அவரைத் தூக்கி வைத்துப் பேசினார். 'இந்த காலி சோப்புப் பெட்டிகளுக்குப் பதிலாக, அவருடைய தங்கமான மனது சிறிது இளகி உருகி வெளியே வந்திருந்தால் போதும் என்று அப்பு குறுக்கிட்டுச் சொன்னான் எல்லோரும் சிரித்தனர். தன்னுடைய மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள, வருஷம் ஒன்றுக்கு பனிரெண்டு ரூபாய்கள் உபகாரச் சம்பளமாக ஒரு மாணுக்கனுக்குக் கொடுப்பதாக சேர்மன் தெரியப்படுத்தினார்.

மாதிரி வியாசம்

சர்வகலாசாலைப் போதகரான மோஹன் என்பவர், மாணவர்கள் எழுதும் வியாசங்கள் முதல்தரமானவையாக இல்லை என்று கருதினார். நல்ல வியாசங்களை எழுதும்படிச்செய்வதற்கு அவர் தான் எழுதிய ஒரு மாதிரி வியாசத்தைப் படித்தார்: பிரத்யேகமான ஒரு புத்தகத்தில் அந்த வியாசத்தை எழுதி வைத்துக் கொள்ளும்படி அவர் மாணுக்கர்களிடம் கூறினார். பிறகு அதைத் திருப்பித் திருப்பிப் படிக்கும்படி அவர் மாணுக்கர்களிடம் சொன்னார். அடுத்த வாரம் அதே விஷயத்தைக் குறித்து அவர் ஒரு வியாசம் எழுதும்படி மாணுக்கர்களிடம் தெரிவித்தார். தான் எழுதிய வியாசத்தைப் பார்த்து எழுதக் கூடாதென்று அவர் கண்டிப்பாகச் சொல்லியிருந்தார். வியாசம் எழுதும் புத்தகத்தை எடுத்துச் சொல்ல அப்பு மறந்து

(அடுத்த பக்கம் பார்க்க)

அனுபல்லவி

; பஸ் நித பா ;	பா நி ம பா	மப நீ	தா நீ	ஸ்ா ;	; ஸா
அங் . க . ரங்	க வை . .	போ . .	க மு	தோ	கோ
நிஸ்ரிம்ரிஸ்	ஸ்ஸ நீ தா நீ ஸ்ா	ஸ்ஸ் நித	பா ;	மபமக	ரிமபநி
பாங் . . க .	ஞ . . ம ஞு லு	எங் . .	தோ	ஸொ . க .	ஸ . க .

ஸ்ரி
. . (ச்ரிங்காரிஞ்சு)

சரணம்

; மா . ம மா	மீ ப ம க ரி ம ரி ஸ	ரீ மா	பா ;	; ரி ம ா	ப நீ
நவ் வுசு	கு . லு . கு . சு .	ஞெ க	தே	கொப்	புன
ஸநி ரிஸ் நீதா	பமநித பமமா	மகமப	மக ரீ	ரிம ரிம	ஸரீ ஸ
புவ் . . . வுல	மு . டு சு . சு	ஞெ . க .	தே . .	. . . .	. . .
; பஸ்ா நிதா	பா பா நி ம பா	ஸ் நி த நி	ஸ்ா ;	; ஸ்ா .	ஸ் ஸ் ா
துவ் வுசு	கு ரு ல . னு	ஞெ . க .	தே		க் ருஷ் ணு னி
நிஸ ரிம ரி ஸ் ஸ் ஸ்	நீ தா நீ ஸ்ா	ஸஸ் நித	பா ;	மபமக	ரிமபநி
ரவ் . . . வ . ்ஜ .	. யு சுனு	ஞெ . க .	தே	வேட . . .	க . ச

ஸ்ரி
. . (ச்ரீங்காரிஞ்சு)

(நௌகா சரித்ரத்திலுள்ள வர்ணமெட்டுகள் பூராவும் காலம் சென்ற என் தகப்பனுர் ப்ரஹ்மஸ்ரீ மஹாதேவ சாஸ்திரிகள் அவர்களிடம் நான் கற்றுக்கொண்டபடி வெளியிடுகிறேன்)



B U R N ' S
REFRACTORIES



பர்ன் ரிப்ராக்டரி தொழிற்சாலைகள் சென்ற 80 வருஷங்களுக்கு மேலாக வேலை செய்து வந்திருக்கின்றது. மேல் உறையுடன் கூடிய குழாய்கள் தயாரிப்பதில் இடைவிடாத ஆராய்ச்சி செய்து வந்திருக்கின்றனர். ரிப்ராக்டரி சாமான்கள் தயாரிப்பதில் இந்தியாவிலேயே வேறு எவருக்கும் இல்லாத அனுபவத்தைப் பெற்றுவிட்டனர்.

சாதாரண செங்கல்முதல், சலிகா, மாக்னஸைட், க்ரோம், மேலான அலுமினு, கோபுலா, செங்கல் சூளைக் கல், இரும்பை எதிர்க்கும் சிமிட்டிகள் முதலியவற்றை பர்ன் கம்பெனியார் தயாரிக்கின்றனர். இவை எவ்வித உஷ்ணத்தையும் தாங்கிக்கொள்ளும்.

இந்திய ஊழியர்களைக்கொண்டு, இந்திய மூலதனத்துடன் இந்தியாவில் தயாரிக்கப்படுகின்றன. பர்ன் ரிப்ராக்டரி சாமான்களால் பிழுயல் செலவு குறைவாகும். எந்த உஷ்ணத்திற்கும் சிறந்து இருக்கும்.

பூரா விவரங்களும் கேட்போருக்கு இலவசமாக அனுப்பப்படும.

SAVE FOR VICTORY
BRITISH
• WAR •
SAVINGS
MOVEMENT
ASK YOUR BANK

பர்ன் & கம்பெனி லிமிடெட்,

ஸ்தாபிதம் : 1781

12, மிஷன்ரோ, கல்கத்தா.

தொழிற்சாலை :- ராணிகஞ்சு & ஜபல்பூர்

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள் :—

பம்பாய் கம்பெனி லிமிடெட், த. பெ. நெ. 109, மதராஸ்.

BURN & CO., LTD.

ESTABLISHED 1781

12, MISSION ROW, CALCUTTA.

WORKS AT RANIGANJ AND JUBBULPORE

(முன்பக்கத்தொடர்ச்சி)

போய்விட்டான். போதகர் கூறிய வியாசம் எழுதப்பட்டிருந்த புத்தகம் அப்புவிடம் இருந்தது. அதே புத்தகத்தில் வேறொரு பக்கத்தில் அப்பு தன் வியாசத்தை எழுதி புத்தகத்தை கொடுத்துவிட்டான். போதகாரியரான மோஹனும், வேறு மூன்று உபபோதகாசிரியர்களும் அந்த வியாசத்தை திருத்தினர். அப்புவினுடைய வியாசத்தைத் திருத்தியவர், மோஹன் எழுதித்தந்திருந்த வியாசத்தை அதற்குமுன் படித்திருக்கவில்லை. அவர் அப்பு எழுதிய வியாசத்திற்குப் பதிலாக மோஹன் எழுதியவியாசத்தைப் படித்துவிட்டு அதற்கு இருபது மார்க்குகளுக்கு எட்டு மார்க்குகள் கொடுத்து விட்டார். புத்தகங்கள் திருப்பிக் கொடுக்கப்பட்டபிறகு, அப்பு இருந்த மூலையில் ஒரே ஆரவாரமாயிருந்தது. உபபோதகாசிரியர் அப்புவிடம் சென்று 'நீ ஏன் இப்படிச் சிரித்துக்கொண்டிருக்கிருய்?' என்று கேட்டார். 'ஐயா இந்த வியாசத்திற்குத் தாங்கள் ஏன் எட்டுமார்க்குகள் கொடுத்திருக்கிறீர்கள்?' என்று அப்பு கேட்டான். 'அந்த வியாசத்திற்கு இவ்வளவு தான் கொடுக்க முடியும். அது மூளையை உபயோகப்படுத்திஎழுதப்பட்ட வியாசமல்ல. அதில் உயர்ந்த கருத்துக்களுமில்லை. அதிக புத்திசாலியான நீ எப்படி அத்தகைய வியாசத்தை எழுதினுயோ தெரியவில்லை. சிறிய இலக்கணப் பிழைகளே இல்லாததால் அந்த வியாசத்திற்கு நான் எட்டு மார்க்குகள் கொடுத்தேன். இல்லையேல, இன்னும் குறைவாகவே கொடுத்திருப்பேன்' என்று உபபோதகாசிரியர் பதிலளித்தார். 'ஐயா அது என்னுடைய வியாசமல்ல. அது மோஹனுடைய மாதிரி வியாசம். என்னுடைய வியாசம் அதே புத்தகத்தில் வேறொரு கோடியில் இருக்கின்றது, என்று அப்பு சொன்னுன். உபபோதகாசிரியர் பிரமித்துப்போனுர். தன்னுடைய தலைவருடைய வியாசத்தை மூளையை உபயோகப் படுத்தாமல் எழுதப்பட்ட வியாசமென்று கூறிவிட்டதற்கு அவர் வருத்தப்பட்டார். அந்தப் புத்தகத்தை அவர் வாங்கி, அப்பு எழுதிய வியாசத்தைப் படித்து. அதற்கு இருபது மார்க்குகளுக்குப் பத்து மார்க்குகள் கொடுத்துவிட்டார். தங்களிருவருக்கும் நடந்த சம்பாஷணையை ரகசியமாக வைத்துக் கொள்ளும்படி அவர் அப்புவைக் கேட்டுக்கொண்டார். புத்தகத்தை வாங்கிக் கொண்டு அப்பு தான் மோஹனைவிட ஒண்ணேகால் மடங்கு நன்ருக எழுதுவதாகச் சொல்லிக்கொண்டான். அதுமுதல் மாணுக்கர்கள் அப்புவை 'ஒண்ணேகால் மோஹன்' என்று பெயரிட்டு அழைக்கத் தொடங்கினர். மோஹனும் மாதிரி வியாசங்கள் எழுதி மாணுக்கர்களுக்குக் காட்டுவதை விட்டு விட்டார்.

நரஸூஸ் காபியைப் போன்ற புத்துயிரளிக்கும் பானம் வேறொன்று மில்லை

கடுமையான வேலைக்கோ, விளையாட்டுக்கோ பிறகு உங்கள் களைப்பைப்போக்கி ஊக்கமளிக்கும் பானம்.

எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானுலும் இந்தியாவில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும். மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
ஹெட் ஆபீஸ்: சேலம்.

MNCK-11-TM



மழை ஜலம் போவதற்கான குழாய்களும் அதன் பிட்டிங்குகளும்

எல்லா நிலைகளுக்கும் அழுத்தம், நீடித்த உழைப்பு, நம்பிக்கையான உழைப்பிற்கு வார்ப்பட இரும்பு குழாய்களுக்கு இணையொன்றும் கிடையாது.

இந்தியாவிலேயே நவீன இயந்திர தளவாடங்களை அமைத்துள்ள ஈஸ்டர்ன் லைட் காஸ்டிங்ஸ் கம்பெனி லிமிடெட், பல வருஷங்களாக வார்ப்பட இரும்பு தண்ணீர் குழாய்கள், இதர வகை குழாய்கள், பிட்டிங்குகள் முதலியவற்றைப் பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷனுக்குத் தயாரிக்கின்றனர்.

காட்லாகும் விலை விபரங்களும் கேட்போருக்கு அனுப்பப்படும்.

தி ஈஸ்டர்ன் லைட் காஸ்டிங் கம்பெனி லிமிடெட்.
12, மிஷன்ரோ, கல்கத்தா.

சென்னை ராஜதானி ஏஜண்டுகள் :
ஸவுத் இந்தியன் எக்ஸ்போர்ட் கம்பெனி லிமிடெட்.
தபால் பெட்டி நெ. 37, மதராஸ். ELC 3

கேஸ்ரின் ரிஜிஸ்டர்ட்

அழகாகவும் அடர்த்தியாகவும் புஷ்ட்டியாகவும் கூந்தலை வளர் விக்கும்
விலை 12 அணு

விக்டோரியா டிபோ. மைலாப்பூர், மதராஸ்.

1 மணியில் வாலிபம்!

ரமணவிலாசினி

காமசக்தியை விருத்திசெய்து, துரிதஸ்கலிதத்தை நிறுத்தி, எல்லோருக்கும்சிற்றின்பத்தில் திருப்தியைத் தரும் பரம ஔஷதம் ...ப்பி ரூ. 1.

மதன மஞ்சரி பார்மஸி
184, சைனா பஜார் ரோட், மதராஸ்

கே. சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சிக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்.
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.

பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

இஸ்லாமிய நூல்கள்

மஹான் முகம்மது நபி	0	8	0
அபுபக்கர் ஸித்திக்	0	12	0
உமரே பாரூக்	1	0	0

முஸ்லீம் வாசகம் 1-5 வகுப்புவரை கிடைக்கும்.

ஷாஜஹான் புக் டெப்போ,
நாச்சியார் கோவில்.

கர்ப்பத்தைத்தடுக்க "ரஹாத்"

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவருமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம் குணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, க்ரோமபேட்டு போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானுல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினுல் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி. S. I.

அரிய தமிழ் நாவல்கள்.

	ரூ.	அ.
வைதேகி	2	8
பத்மசுந்தரன்	2	8
சாருலோசனு	2	8
காதலின் கனி	2	8
ராதாமணி	2	8
தியாகக் கொடி	2	0
நவநீதகிருஷ்ணன்	2	0
சாமளநாதன்	2	0
மங்களபாரதி	2	0
சண்பகவிஜயம்	1	12
கௌரீமுகுந்தன்	1	12
ஸாரமதி	1	12
தயாநிதி	1	12
உணர்ச்சி வெள்ளம்	1	8
சந்தோஷமலர்	1	8
சோதனையின் கொடுமை	1	8
ராஜமோகன்	1	4
அனுதைப்பெண்	1	4
இன்பஜோதி	1	4
வானக்குயில்	1	4
கஸ்தூரி திலகம்	1	4
கானல் நீர்	1	4
புகழ்மாலை	1	4
கலா நிலையம்	1	4
ஜீவியச் சுழல்	1	4
ஆத்மசக்தி	1	4
உத்தமசீலன்	1	4
பரிமளகேசவன்	1	4
பிச்சைக்காரக் குடும்பம்	0	8

சுதேசமித்திரன் புத்தக சாலை,
சென்னை.

Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras.- Editor C. R. S...